உ
சிவமயம்



# தெய்வத்தமிழில் வழிபடுவோம்



அமரர்

**தர்மலிங்கம் ஞானேஸ்வரி**

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த நினைவு வெளியீடு

**13.09.2013**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"



உருவாய் மண்ணில்
17-03-1946

அருவாய் விண்ணில்
16-08-2013

அமரர்

# தர்மலிங்கம் ஞானேஸ்வரி

அவர்கள்

## திதி வெண்பா


செந்தமிழ் வழிபாடுசீரோங்கு விஜயவருட ஆடித்திங்களதில்
தமிழ்மறையோங்கு நவமித்திதிதனில் - திருமறைப் புகழ்
ஞானலிங்கேச்சுரத்து ஞானருட்சுரைஞர் தாயார் ஞானேஸ்வரி
பிறவிவினையொழித்து சிவத்திருவடி அடைந்ததிதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

"தாயிற் சிறந்ததொரு கோவிலுமில்லை"



இணுவை ஊரைப் பிறப்பிடமாகவும்
சுவிஸ் நாட்டை வதிவிடமாகவும் கொண்ட

அமரர்

## தர்மலிங்கம் ஞானேஸ்வரி

அவர்களின்

நினைவாக வெளியிடப்பட்ட


# "தெய்வத்தமிழில் வழிபடுவோம்"

13.09.2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# காணிக்கை



## தெய்வத்தமிழில் வழிபடுவோம்

"செந்தமிழில் கருவறையில் நாம் வழிபாடு செய்யவேண்டும்
பண்ணுதற்கடவுள் ஆய்ந்த தமிழ் மண்ணிடை ஆளவேண்டும்"
சைவநெறிக்கூடம் சுவிஸ் நாட்டில் கொண்ட நெறிக்கு
தாயகத்தின் தாயகமாம் தமிழ்நாட்டில் எம் குருவாக எழுந்துள்ள
தமிழ்மறை குடமுழுக்குகள் 1400 மேலும் ஆற்றி,
தமிழாகமத் திருமணங்கள் 3000 மேலும் ஆற்றி,
செந்தமிழ் ஓதுவார்கள், சிவாச்சாரியார்களுக்குப் பயிற்சி அளித்து
பலபத்து நூல்கள் படைத்து சைவத்தமிழ் வளர்த்து,
சைவசித்தாந்த நுண்பொருளை உணர்ந்து வாழும்
செந்தமிழ் வேள்விச்சதுரர் மு. பெ. சத்தியவேல் முருகனார்
அருளிய நூல்களில் இருந்து தொடுக்கப்பட்ட ஆரமாக
" தெய்வத்தமிழில் வழிபடுவோம்" எனும் நூல்
ஐயிரண்டு திங்கள் என்னைக் கருவில் சுமந்த
என் அன்னை சிவஞான. தர்மலிங்கம் ஞானேஸ்வரி நினைவாக
குடும்பத்தினரால் வெளியிடப்படுகிறது.

தொட்டில் இடுவது முதல் திருவடிப்பேறுவரை
அனைத்து வாழ்வியல் சடங்குகளும், குடமுழுக்கு முதல்
மண்டலாபிடேகம் வரை வண்டமிழில் நாமே நடாத்தலாம்
என்பதை ஐயா அவர்கள் தன் நூல்களில் விளக்குவது மட்டுமல்லாது
தூய செந்தமிழ் மாமறைகளினால் சடங்குகளை ஆற்றுவதற்கு
அனைவருக்கும் பயிற்சியும் அளித்து வருகிறார்.
இத்தொகுப்பு தமிழின் சிறப்பினையும், செந்தமிழில்
கருவறையில் நாம் தயங்காது வழிபாடு செய்யலாம்
எனும் விளக்கத்தையும் அளிக்கிறது.

நான் விழும் முன்னே தன் கரம் கொண்டு தாங்குவாள்
நான் வாடும் முன்னே என்னைத் தேற்றி நின்றவள்
நான் அழும் முன்னே என் கண்ணீர் துடைப்பவள்
அம்மா என்னும் தெய்வம் நீ...

எழுத்தில் வடிக்கமுடியாது உன் பாசம்
தீர்க்க முடியாக் கடனம்மா அம்மா
உதிரம் தந்தாய் உடலும் தந்தாய்
தெய்வம் எனக்கு என்றும் நீதானம்மா

அகரம் தந்த அன்னைக்கு
இந்த நூலைப் படைத்து ஆர்க்கிறேன்
மறையாச் சிவத்தில் தவறாது பூசிக்கிறேன்
சைவத்தமிழாய் நீ அழியாச் சிவத்தில் நிலைத்திடவே!

**"சிவருசி" தர்மலிங்கம் சசிக்குமார்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# தோத்திரப் பாக்கள்



## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

## தேவாரம்

பெற்ற தாய்தனை மகமறந் தாலும்
பிள்ளையைப் பெற்றதாய் மறந்தாலும்
உற்ற தேகத்தை யுயிர்மறந் தாலும்
உயிரை மேவிய வுடல்மறந்தாலும்
கற்ற நெஞ்சங் கலைமறந் தாலும்
கண்கள் இமைப்பதும் மெய்மறந் தாலும்
நற்றவத்தவ ருள்ளிருந் தோங்கும்
நமச்சிவாயத்தை நான்மற வேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்தஎம் பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ அருளிலை ஆனால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென்று அருள்புரி யாயே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோ ருணர்வே
தெளிவளர் பளிங்கின் றிரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவள ருள்ளத் தானந்தக் கனியே
அம்பல மாடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம் பக்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின்செய் மண்டபத் துள்ளேபுகுந்து
புவனியெல்லாம் விளங்க
அன்னநடை மடவாளுமை கோனடியோ
முக்கருள் புரிந்து
பின்னைப் பிறவியறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்.

## பட்டினத்தார் பாடல்

வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள்மேலும்
கட்டிலிலும் வைத்துஎன்னைக் காதலித்து - முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டுந்தாய் தனக்கோ
விறகிலிட்டுத் தீ மூட்டுவேன்.

## திருமந்திரம்

ஊரெலாங் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்
சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பொழிந் தார்களே.

## பிழைகளைப் பாடல்

கல்லாப் பிழையுங் கருதாப் பிழையுங் கசிந்துருகி
நில்லாப் பிழையும் நினையாப் பிழையும்நின் னஞ்செழுத்தைச்
சொல்லாப் பிழையும் துதியாப் பிழையுந் தொழாப்பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய் கச்சியேகம்பனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# திருப்புகழ்

உம்பர்தருத் தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலிற் றேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேன்பருகிப் பலகாலும்
எந்தனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தைவல த்தாலருள்கைக் கனியோனே
அன்பர் தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமாளே.

# வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வத்தமிழ் அறக்கட்டளை
DHEIVATHAMIZH ARAKATTALAI
எண்: 9/1, மாஞ்சோலை முதல் தெரு, ஈக்காட்டுத்தாங்கல்,
சென்னை - 600032, தமிழ்நாடு, இந்தியா.
No. 9/1, Manjolai 1st street, Ekkaduthangal,
Chennai -600032, Tamil Nadu, India
website :: dheivathamizh.org
Email: editor@dheivathamizh.org

| தலைவர் Chairman | மேலாண்மை அறங்காவலர் Managing Trustee | செயலாளர் Secretary | பொருளாளர் Treasurer |
|---|---|---|---|
| மு.பெ.சத்தியவேல் முருகன் M.P.Sathiyavel Murugan | பா.சீனிவாஸ் B.Shrinivas | இரா.உமாபதி R.Umapathy | மு.பெ.சத்தியானந்தம் M.P.Sathiyanandam |

# ஞானத்தைப் பெற்று ஞானத்தில் உயர்ந்து ஞானம் வானத்தைச் சேர்ந்தது

சொர்ணபுரி சுவிட்சர்லாந்தின் தலைநகரான பேர்ண் நகரில் அமைந்துள்ள சைவ நெறிக்கூடத்தின் சமமிலாச் சமயச் சாதனையான அருள்மிகு ஞானலிங்கேசர் ஆலயத்தைச் செந்தமிழ் மறைகளால் சீர்தூக்கிச் சிறப்போங்கச் செய்துவரும் எனது உழுவலன்பரும், மனத்திற்கினிய மாணவருமான தமிழ் வழிபாட்டுத் தனிநாயகம், சிவருசி, தர்மலிங்கம் சசிக்குமார் அவர்களின் தாய் திருமதி ஞானேஸ்வரி 16.08.2013 ஆம் நாளன்று தன் கடன், தாய்க்கடன், தனி ஞானத் தெய்வக்கடன் ஆகியவை ஆற்றி அந்த ஏணிப்படிகளில் ஏறி அருள்மிகு ஞானலிங்கேசர் திருவடி நிழலை அடைந்தார் என்ற செய்தி கேட்டுப் பிரிவால் துயரமும், அவர் பெற்ற அரும்பெரும் வாழ்வால் நெகிழ்வும் அடைந்தேன்.

அம்மையாரை முதன்முதலில் தமிழ் வழிபாட்டினை உலகப் பிரகடனம் செய்ய அன்பர் சசிக்குமார் என்னை அழைத்தபோது 15.09.2012ஆம் நாளில் சந்தித்தேன். சசிக்குமார் என்கின்ற ஞானவித்தை வயிறு சுமந்து வளர்த்து வானோர்க்கும் ஏனோர்க்கும் வாழ்வளித்த அம்மை என்று வணங்கினேன்.

ஓர் அவதாரம் எங்கே தோன்ற வேண்டும் என்பதை இறைவன் நிச்சயிக்கிறான். சம்பந்தர் சீர்காழியில் தோன்றியது அப்படித்தான். அதுபோல, ஞான வித்தகர் சசிகுமார் கருவிருக்க வேண்டிய மணி வயிறு மறைந்த தெய்வத்திரு ஞானேஸ்வரி அம்மையாருடையது தான் என்று அங்கணனாம் அவன் தான் தேர்ந்தெடுத்தான் என்பது மிகையல்ல; முற்றிலும் உண்மை!

சுந்தரரைப் பெற்றதனால் அவரது தாயாரான இசைஞானியாரும் நாயன்மார்களில் ஒருவரானார். அஃதே போல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சசிகுமாரைப் பெற்ற காரணத்தால் இந்த இசைஞானேஸ்வரியும் வணங்கத் தக்கவரே!

சசிகுமாரைப் பெற்ற போது அம்மையார் எப்படி உச்சி மோந்து உளம் மகிழ்ந்திருப்பார்? பட்டினத்தார் பாடியது நினைவிற்கு வருகிறது.

ஐயிரண்டு திங்களா அங்கமெலாம் நொந்து பெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்து- செய்ய இரு
கைப்புறத்தில் ஏந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பில் காண்பேன் இனி.

எதைத் துறந்தாலும் துறக்கலாம்; தாயன்பைத் துறக்க இயலுமா? "பாரனைத்தும் பொய்யெனவே பட்டினத்துப் பிள்ளையைப் போல் ஆரும் துறக்கை அரிது அரிது" என்று போற்றப்பட்ட அவராலே தாயன்பைத் துறக்க முடியவில்லையே!

அள்ளி இடுவது அரிசியோ தாய்தலைமேல்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல் - மெள்ள
முகமேல் முகம்வைத்து முத்தாடி என்றன்
மகனே என அழைத்த வாய்க்கு

என்று புலம்பிய பட்டினத்தாரின் அனுபவம் நம் சசிக்குமார் அவர்களுக்கு இன்று நேர்ந்திருக்கிறது.

ஆனால் நெஞ்சம் தளராமல் ஞானலிங்கேசரின் தஞ்சம் அடைந்த அம்மையார் அவனது இனித்த எடுத்த பொற்பாத இணையடி நிழலில் தனித்த பேரன்பினால் பேரா இயற்கைப் பேரின்பத்தில் ஆர்வார் என்பதில் நொய்யில் பிளவளவேனும் ஐயமின்று!

அவர்தம் குடும்பத்தாரையும் அன்பர்களையும் அவர் வானின்று தொடர்ந்து வழிகாட்டுவார் என்பது திண்ணம். அவர் புகழ் நீடு வாழ்க!

அன்பன்

செந்தமிழ் வேள்விச் சதுரர்

**மு. பெ. சத்தியவேல் முருகன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

திருச்சிற்றம்பலம்

ஆட்டுவித்தால் ஆர் ஒருவர் ஆடா தாரே
அடக்குவித்தால் ஆர் ஒருவர் அடங்கா தாரே
ஓட்டுவித்தால் ஆர் ஒருவர் ஓடா தாரே
உருகுவித்தால் ஆர் ஒருவர் உருகா தாரே
பாட்டுவித்தால் ஆர் ஒருவர் பாடா தாரே
பணிவித்தால் ஆர் ஒருவர் பணியா தாரே
காட்டுவித்தால் ஆர் ஒருவர் காணா தாரே

**ஞானேஸ்வரி...**

திருநாவுக்கரசர் பெருமான் மேற்காணும் தேவாரத்தில் செம்பொன் அம்பலன் பெருமைகளைத் தன் திருவாயால் பாடியிருக்கிறார். பெருமான் ஆட்டுவிக்கும் போது யாரால் ஆடாது இருக்கமுடியும்? பெருமான் அடக்கினால் யாரால் அடங்காதிருக்க முடியும்? அவன் ஓட்டுவித்தால் யாரால் ஓடாமல் இருக்க முடியும்? அவன் என்னை உருக்குவித்தால் எப்படி உருகாமல் இருக்க முடியும்? அவன் பாட்டுவித்தால் என்னைப் பாடவும், பணிவித்தால் தன்னைப் பணியவும் செய்தான். அவன் காட்டும் போது காணவும், காட்டாது விட்டால் காணாது போவதுமே நம் உலக வாழ்க்கையாகும். இப்பெரும் இறைவட்டத்தில் பெருமான் கருணையே அனைத்திற்கும் காரணம் என்பதை எனக்கு உணர்த்தியவள் என் தாய் ஆவாள். பெருமான் அன்னையின் அன்பு வடிவத்தில் தான் எனக்குத் தன்னை உணர்வித்தான். இவ்வுலகில் என் அன்னை பிறந்து, வாழ்ந்து இன்று திருவடிப்பேறு பெற்ற காலம்வரை, என் தாய் அன்பில் பெருமான் கருணையைக் கண்டேன்

ஈழத்தில் யாழ்ப்பாணத்தில் 17.03.1946 இணுவை ஊரில் பிறந்து புலத்தில் சுவிஸ் நாட்டில் என்னுடனும், எனது சகோதரிகளுடனும் வாழ்ந்து, நிறைவாக தாய் நாட்டில் 15.07.2013 அன்று நடைபெற்ற ஞானாம்பிகை உடனாய ஞானலிங்கேச்சுரர் திருக்கோவில் மற்றும் எமது குலதெய்வம் ஞானவைரவர் திருக்கோவில் அடிக்கல் நாட்டுவிழாவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டு, மீண்டும் சுவிஸ்நாடு திரும்பி, அனைத்துப் பிள்ளைகளுடனும் அளவளாவி - உரையாடி 16.09.2013 அன்று திருவடிப்பேறு பெற்ற என் அன்னை, என்னையும், எனது சகோதரிகளையும் பெற்றெடுத்து சீராட்டிப் பாராட்டி வளர்த்து, பிள்ளைகள் நாம் வாழ, தன் உதிரத்தால் உழைத்து, தன் விருப்பு வெறுப்புக்களை ஒதுக்கி வைத்து எமக்காக உழைத்தவள். வாழும் போது எம் கண்முன் நின்ற தெய்வமாய் எம்மிடை வாழ்ந்து, இன்று எமைப்பிரிந்து இறைவனின் திருவடியில் என்றும் எமைவிட்டு நீங்காத் தெய்வமுமாகினாள்.

**திருவடிப்பேறு...**

எம்பெருமான் திருவருள் குண்டலினி சக்தியாகி, அது தலை நோக்கிப் பாய்ந்து அருள்வதே திருவடிப்பேறாகும். இதன்பொருளை கீழ்க்காணும் வண்ணம் திருமந்திரத்தில் திருமூலர் பாடியுள்ளார்.

இசைந்தெழும் அன்பில் எழுந்த படியே
பசைந்திடும் ஈசரைப் பாசத்துள் ஏகச்
சிவந்த குருவந்து சென்னிகை வைக்க
உவந்த குருபதம் உள்ளத்து உவந்ததே.

திருவருள் வலத்தால் ஒத்து எழும் அன்பின்கண் அந்த அன்புருவாக விழைந்து எழும் சிவபெருமானை மேலும் மேலும் முறுகி, வளரும் அன்பின்வழிச் சென்று தொழுவர். தொழவே, சிவபெருமான் சிவகுருவாக வந்து மும்மலங்களை அகற்றுவர். அகற்றி உச்சியின்கண் திருக்கையினைப் பொருந்துமாறு வைத்து அருளுவர். அருளவே அவர்தம் திருவடி சீவர்களின் உள்ளத்து இடனமைத்து வெளிப்பட்டு அமரும் என்பது இப்பாட்டின் பொருளாகிறது. இப்பாடலிற்கமைய திருவடிப் பேறு அமையும் என்பதை, என் அன்னைக்கு இப்பேறு கிடைத்த நல்நிலையில் மட்டுமே, என்னால் உணரக்கூடியதாக அமைந்தது.

என் தாயாரின் நிறை மூச்சு வெளியேறும் வேளை, என்னைச் சிவம்வந்து ஆட்கொண்டு, நான் சிவசொரூபமாகி, என் அன்னையினை எனது மடியில் வைத்துத் தாலாட்டினேன். அப்போது என் அன்னை தன் அனுபவ நிலையில் பேச்சற்று, உணர்வு கெட்டு, தான் என்ற நிலை அறியாமல் தெளிந்த நீர் போல அசைவில்லாமல் இருக்கும் சிவமாம் தன்மையும் கடந்து நின்றாள். என் தாயின் உச்சியில் எனது ஒருகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானலிங்கப்பெருமான் திருவருள் திருநீறும், மறுகை இதயத்தின் பின்புறம் ஞானாம்பிகை அன்னையின் தேசிக்காயும் கொள்ள, நான்கு வாக்கினால் உதிக்கும் நாதத்தைக் கடந்த எல்லையற்ற சிவத்துடன் ஒன்றாகினாள். ஆதிசங்கரரும், ரமணமகரிசிகளும் தன் தாயாற்கு அளித்த திருவடிப்பேறு திட்சை என் தாயாருக்கு நான் அளிக்க அவ்வேளை ஆணை வந்தது. மணிவாசகர் திருவாசகம் ஓதி, சிவமந்திரம் ஓத, தூல சூக்கும காரண உடல்களில் உள்ள, காரணமான தடைகள் அன்னைக்கு அகன்றன. உலகில் யாவருக்கும் தலைவனான சிவத்துடன், ஞானாம்பிகை உடனாய ஞானலிங்கப்பெருமான் திருவடியில் மௌன யோகத்தில் அன்னை பெரும்பேறு பெற்றாள்!... பிறப்பு இறப்புக்கு எல்லையான பிரணவத்தையும் கடந்து திருவடிப்பேறு பெற்றாள்!

ஞானலிங்கப்பெருமானின் மௌன ஆனந்தமாகிய பேரின்பத்தில் தனது பசுகரங்களை அழித்து, அகண்ட அறிவாகிய சிவத்தைப் பதிப்பித்து, தன்னைத் தான் அறியாமல் செய்து, வெப்பமற்ற சந்திர மண்டல ஒளியில்; மனம் வாக்கு காயம் ஆகிய மூன்றையும் கைக்கொண்டு, அவற்றால் அடைந்த பெருமைகளை அழித்து, பேரரசி ஞானாம்பிகை உடனாய ஞானலிங்கப்பெருமான் திருவடிகளைச் சூட்டி, தன்னிடத்தில் நிலை பெற்றனன் என தன்னை ஞானேஸ்வரி.

திருவடி வைத்தென் சிரத்துருள் நோக்கிப்
பெருவடி வைத்தந்த பேர்நந்தி தன்னைக்
குருவடி விற்கண்ட கோனையெங் கோவைக்
கருவழி ஆற்றிடக் கண்டுகொண் டேனே.

**என் தாய் திருவடி பெற்ற வேளை திருமந்திரத்தின் மேற் பொருளை அன்று நான் உணர்ந்தேன்.**

திருவடி ஞானம் சிவமாக்கு விக்கும்
திருவடி ஞானம் சிவலோகம் சேர்க்கும்
திருவடி ஞானம் சிறைமலர மீட்கும்
திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே.

இவ் உலகில் பிறக்கும் அனைத்து உயிர்களும் பிறவியை நீந்திக்கடந்து தேடும் திருவடி உணர்வினை, திருமூலர் விளக்கியதுபோல், மும்மலத்தையும் விடுவித்து, அவ்வுணர்வில் கிடைத்தற்கரிய திருவருட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திகளை எய்துவிக்கும் சிவவுலக வாழ்வினைச் சேர்ப்பிக்கும் சிவமாம் பெருவாழ்வு, என் அன்னைக்கு நிறைகொள்ளக் கூட்டுவித்த மகிழ்ச்சி, அவள் கண்களில் இருந்து கண்ணீராகப் பெருக்கெடுத்து, என் தொடைகள் நனைத்தது. எனது சகோதரிகளும் நானும் தொடர்ந்து தேவாரம் பாட, மேலோதிய திருவருள் ஆணையின்வழி என் அன்னையின் மூச்சு அதிகாலை **16.08.2013** வெள்ளிக்கிழமை **05.40** மணிக்கு நிறைவுற்றது. அன்று எனதன்னைக்கு மிகவும் விருப்பத்திற்குரிய ஞானாம்பிகை உடனாய ஞானலிங்கப்பெருமான் திருக்கோவிலின் கொடியேற்ற விழாவாகும். பசுவாகிய உயிர் பதியாகிய சிவத்தை அடைவதை கொடியேற்றமாக நிகழ்த்தப்படும் இத்திருநாளில், ஞானலக்குமிக்கு சுமங்கலி வழிபாடுநடைபெறும் நாளில் என் அன்னை திருவடிப்பேறுபெற்றார்.

**பிரிவில் ஞானம்...**

முடிமன்ன ராகின்மூ வுலகமது ஆள்வர்
அடிமன்னர் இன்பத் தளவில்லை கேட்கின்
முடிமன்ன ராய்நின்ற தேவர்கள் ஈசன்
குடிமன்ன ராய்க்குற்ற மற்றுநின் றாரே.

முடிசூடிய மன்னராயின் மூன்று உலகங்களையும் ஒரு சேர ஆளுவர். ஆராயின் சிவனடியாராகிய மன்னர்கள் பெறும் இன்பத்துக்கு அளவே இல்லை. என்னும் மூலன் வாக்கு என் மனத்தில் திடத்தையும் சிவஞானத்தையும் அளித்தபோதும், என் அன்னை என்னை விட்டுப் பிரிந்தாள் என்ற பிரிவு பட்டினத்தடிகள் தாய்ப்பாசத்தில் துடித்ததைப் போல் துடித்தது. ஞானமும் அஞ்ஞானம் கலந்த இரு உணர்வுகளும் ஒன்றை ஒன்று போட்டியிட்டு பட்டினத்தடிகள் பாடலில் ஆற்றுப்பெற்றது என் மனம்:

ஐயிரண்டு திங்களாய் அங்கம் எல்லாம் நொந்து பெற்றுப்
பையல் என்ற போதே பரிந்து எடுத்துச் - செய்ய இரு
கைப்புறத்தல் ஏந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பில் காண்பேன் இனி.

முந்தித் தவம்கிடந்து முந்நூறு நாள் சுமந்தே
அந்திபகலாச் சிவனை ஆதரித்துத் - தொந்தி
சரியச் சுமந்து பெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல் மூட்டுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள்மேலும்
கட்டிலிலும் வைத்து என்னைக் காதலித்து - முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டும் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீமூட்டு வேன்.

நொந்து சுமந்து பெற்று நோவாமல் ஏந்தி முலை
தந்து வளர்த்து எடுத்துத் தாழாமே - அந்திபகல்
கையிலே கொண்டு என்னைக் காப்பாற்றும் தாய் தனக்கோ
மெய்யில் தீமூட்டு வேன்.

அரிசியோ நான் இடுவேன் ஆத்தாள் தனக்கு
வரிசை இட்டுப் பார்த்து மகிழாமல் - உருசி உள்ள
தேனே அமிர்தமே செல்வத் திரவியப்பூ
மகனே என அழைத்த வாய்க்கு.

அள்ளி இடுவது அரிசியோ தாய்தலைமேல்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல் - மெள்ள
முகமேல் முகம்வைத்து முத்தாடி என்றன்
மகனே என அழைத்த வாய்க்கு.

எமக்கு ஞானவைராக்கியத்தின் பாடமாக அன்னையின் திருவடிப்பேறு அமைந்தது. அன்னையின் ஆன்மா என்றும் நீங்காத சிவானந்தமாகிய சித்திடம் பொருந்தி நிற்கிறது. ஆகவே துயர் களைவாய், அநாதியே பற்றியுள்ள ஆணவமலம் அறிவை மறைக்காது, சிவானந்த நிலையில் அமுதத்தில் அன்னை நிலை கொள்கிறார். ஆகவே துக்கம் தவிர்ப்பாய்! எனவும் என் குருநாதனும், யோகரும் எடுத்துரைத்தபோதும் எமது குடும்பம் பிரிவில் துயருற்றது. இதற்குத் தீர்வினை பெருமானே வழங்கவேண்டும் என்று நாம் வேண்டவே " அறியப்படும் பொருள் சிவம், என்று துணிந்து அவ்வழி நிற்போர்க்கு ஞானத்துக்குரிய மற்றவைகளும் பொருந்தி நிற்கும், அறியப்படும் பொருளான சிவத்தை ஆன்மா அறிந்து அதுவாகவே அமைவது வீடாகும்" உன் அன்னைக்கு சிவஞானதிருவடிப்பேறால் விளைந்த மெய்ஞ்ஞான அறிவை அறி வாயாக என மணிவாசகர் உருவில் கனவில் விளக்கினார் ஞானலிங்கப் பெருமான். உண்மைப்பொருள் தான் என்ற ஆன்மாவும் அவன் என்ற சிவமும் ஆக இரண்டு, தன்னையும் அவனையும் தனதொளியில் காட்டிப் பெருமான் நாம் கண்டு தானாக விளங்கும் உணர்வை உணர்வித்தான். அவன்விளங்கும் நிலையில் நான் என்றும் அவன் என்றும் வேறுபடுத்திக்காணும் உணர்வு மாறி, நானே அவன் என்று விளக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருளினான்! அன்னையும் அவன் நானும் அவன் எனும் உணர்வையும் உணர்வித்தான் எம்பெருமான்.

அன்னையின் வாழ்நிறை திருவடிச் சடங்குகள் 20.08.2013 வண்டமிழில் நடைபெற்று, நீறு 30.08.2013 காசி நகரில், உலகநாதன் திருவடியில் கங்கையில் கரைக்கப்பட்டது.

**நன்றி...**

எம் அன்னையின் பிரிவால் குடும்பம் வாடுகையில், எம்மை ஆற்றுப்படுத்தி ஆறுதல் அளித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் இவ்வேளை எனது உளமார்ந்த நன்றிகளை எம் குடும்பத்தின் பெயரால் நவில்கிறேன். குறிப்பாக பணிப்பேற்று திருக்கோவில் கடமைகளில் இருந்தபோதும், உள்ளத்தால் அருகிருந்து எமது குடும்பத்தின் இன்பத்திலும் துன்பத்திலும் எப்போதும் உடன் இருக்கும் சைவநெறிக்கூட அன்பர்களுக்கும், ஞானலிங்கேச்சுரர் திருக்கோவில் தொண்டர்களுக்கும் எனது அன்பினை இவ்வேளை பகிர்கிறேன். தூர நாடுகளில் இருந்து தொலைபேசியிலும், நேரிலும் பங்கெடுத்த அன்பு நெஞ்சங்களுக்கும் உள்ளம் கனிந்த நன்றிகள் என்றென்றும் பகிர்கிறேன்.

**குருவாய் வருவாய்....**

உதிரப் பாலூட்டி எம் ஊன் வளர்த்தாய்
உயிரும் தானூட்டி வளர்த்தாய் எம்மை
துயிலும் மறந்திருப்பாய் எம் துயர்களைவாய்
உன் மக்கள் மேன்மை தவமெனக்கொண்டாய்
உன் அன்பிற்கேது உவமை அம்மா?

தாயே உன் வியர்வையில் வாழ்ந்தோம்
ஈடும் உண்டோ உன் உழைப்பிற்கு
உன் உழைப்பில் அனைத்தும் கண்டோம்
அன்பே சிவம் என்பது உன்னில் கண்டது
உன் முகமே எம் உலகாகும் தாயே

இன்பத்தில் துன்பத்தில் எமைத் தாங்கினாய்
அம்மா உன் அன்பு ஆகாய கங்கைதானே....
நீதந்த ஊனம்மா நாங்கள் நால்வர்
உன் குருதியாலே ஆளாக்கினாய் எம்மை நீ
வாஞ்சையுடன் எமை அணைக்கும் உந்தன்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்டத்திலும் வீட்டிலும் நாளும் உழைத்தாய்
எமக்காக உன் உயிரும் தருவாய் அம்மா
ஐயிரண்டு திங்கள் வலிதாங்கி எமைப்பெற்றாய்
வலிகள் பலவும் கடந்து வந்தாய்
வலி அறியாது நாம் வாழ வைத்தாய்

எம்மைக் கருவறையில் சுமந்தவளே தாயே
இன்று கருவறையில் சிவமாகி நிற்பவளே
வறுமையில் செல்வத்தில் இருமை அறியாய்
தலை அணையாய் நீ இருக்க
உன் மடியில் நால்வரும் உறங்கிக்கொள்வோம்

உன் பிரிவு பெரும் மலையான பிரிவே -
என் உடன் பிறப்புக்களுக்கு - நீயறிவாய்
எவருக்கும் தானே நித்திரை வருவதில்லை
உன் மடியில் படுக்க இனிமுடியாதம்மா
தத்துவங்கள் ஏதும் உன் மடியாகாதே...

சிவநெறியினை நான் நாட வைத்தவள் நீ
என் உயிரே நன்னெறியே நீயம்மா
நானிலத்தில் நாயகியும் நீ எனக்கு
செந்தணலில் இட்டனையோ உன்னை - இல்லை
சிவத்திடமே ஒப்படைத்தேன் நின்னையம்மா

இளவயதில் தந்தை இழந்தோம் நாம்
நாலு சேயும் உனதடியில் ஆளானோம்
அஞ்சுதலை அறியமாட்டாய் - நெஞ்சுக்கு நீதி
இது நீ வாழ்ந்த வாழ்க்கை அம்மா
உன் அன்பிற்கு ஈடேதுமில்லை அம்மா

எம் அச்சமெல்லாம் தவித்தாய் அம்மா
பத்து நான்கு வயதில் நான் புலம்பெயர
வீரத்தைப் போதித்தாய், வண்டமிழ் வாழ்வித்தாய்
பல நாட்கள் நீ பட்டினியாய் இருந்திருப்பாய்
பிள்ளைகள் பசிபோக்காத நாளேது அம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் ஒலியை தாலாட்டாய் தியானித்து
இதயத்தில் தாயே உன்னைத் தாங்கி
நாளும் பொழுதும் கடந்து தவமிருந்தேன்
2000த்தில் ஒருநாள் நீ இங்கு வந்தாய்
ஈடேறியது தவமென ஆனந்தக் கூத்தாடினேன்
வைரவர் கனவில் உதிர்த்தார் வார்த்தை
இனி உன் தாய் உன்னோடு இருப்பாள்
கண்டது கனவோ நினைவோ திகைக்க
நினைவானது உன் வாழ்க்கை எம்மோடு
இறைஞ்சினேன் அன்னையே உனக்கா இறையிடம்

நான் நிலையான நிலையைத் தேடி
துணிவாக தனியாக நடந்த போதும்
நிலைகுலையாத் துணிவு தந்தவளே
மறவேன் தாயே உன்னை என்றும்
மறவேன் தாயே ஞானேஸ்வரி உன்னை

பசுவைக் காணக் கன்றுகள் போல்
உன் முகம் தேடி அலைகிறோம்
மீளாப்பிரிவால் இது தாளாது தவிக்கிறோம்
தவிப்புகள் எதுவானாலும் உன் முகம்
அளிக்கும் சிரிப்பு - அதுவே மருந்து

தேடித் தேடிய புண்ணியங்கள் செய்திடுவாய்
உலகம் நடிக்கின்ற நாடகத்தில் நடிக்காது
நடிப்பில்லா உள்ளத் தூய்மை அம்மா
பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் மருமக்கள்
உன் துடிக்கின்ற இதயம் இவர்களுக்கே

வெள்ளிக்கிழமை கிழக்கில் இளங்கதிர் எழவில்லை
இரவின் இருளும் நீங்கா வைகறையில்
புலர்ந்திடும் பொழுது மலரா உன் விழிகள்
பெருமான் திருவடியில் மலர்ந்தனவோ அன்று?
ஞானேஸ்வரியே ஞானாம்பிகை திருவடி அடைந்தனையோ

நன்நெறி சிவநெறி என் வழியாக
நான் சென்ற வழி எங்கும் நீ
ஞானாம்பிகை ஞானலிங்கப்பெருமான் அடிபற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு குழந்தையாய் வலம் வந்தாய்
தாயே உன் தூய்மைக்கோர் ஈடேதம்மா

கண்டம் உனக்கென சாத்திரம் உரைக்க
மூன்று முறை வேள்விகள் செய்தேன்
மூன்று முறையும் உயிர்த்து வந்தாய்...
நான்காம் முறை பாசத்தை அறிவுவென்றதுவோ?
கூற்றுவன் வரவில்லை, தில்லைக்கூத்தனே வந்தானம்மா
உன்பிரிவில் நாம் வாடியபோது எம்-
குருநாதனும் சிவஞான யோகரும் ஆற்றியது
"அடைந்தாள் அன்னை சிவனடியில் திருவடிப்பேறு"
அறிவுத் ஞானத்தை தேடிய போதும்
மனம் உன் பாசத்தால் தவிக்குதம்மா

அம்மா நீ அசைவற்று யோகியாய் ஆனபோது
நான் குருநாதனை கடுமையாய் வேண்டினேன்
என் குருநாதன் தன்குரு பணிந்தளித்த பதில்
பெருமான் பக்கம் நில் - அவன் ஆட்டத்தைக் கண்டுகளி
பேறு எதுவானாலும் திருப்பேறெனக்கொள்! ஏற்றுக்கொண்டேன்...

திருவடி நரசிம்மச் சித்தர் சொன்னார்
யாவரும் பெறாத பேறு பெற்றாள் உன் தாய்
பெருமான் திருவடியில் வீடு பெற்றாள்!
கைகொட்டி ஆடடா ஆனந்தக்கூத்து...
சிரியெடா திருக்கைலையின் பேறு கண்டு...

அவன் ஆட்டுவித்தால் ஆடும் நான்
அவன் பணிப்பில் திடம் கொண்டேன்
அவன் பாட்டுவித்தான் பாடிநின்றேன்...
நன்நெறி சிவநெறி திருக்கூடத்தின் திருப்பாதையில்
தாயே நீ என்றும் குருவாய் முன்வருவாய்!

"சிவருசி"

**தர்மலிங்கம் சசிக்குமார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாய் என்பவளுக்கு ஈடேது இணையேது
## மானிடராய்ப் பிறந்து மனதை இதமாக வைத்து
## மாண்போடு வாழ்ந்து உடல் விழும் போது
## தெய்வ நிலைக்கு உயர்த்தப்படுவார்

**தன்னை அறிபவர் பார்ப்பவர்**
**பிரமத்தை அறிபவர் பிரமஞானிகள்.**

முதன் முதலாக ஞானேஸ்வரி தாயைப் பார்த்த போது முகத்தில் திருநீறு அலங்கரிக்க உடல் உறக்க நிலை அறிவு இயக்க நிலையாக இருந்தது. என்னால் உணர முடிந்தது. தன்னை அறிந்தால் தலைவனை அறியலாம். அறிந்து வாழ்ந்து கொண்டு இருந்த இந்த நிலையில் சற்று உடல் தளர்ந்த போது வாழ்ந்தது யாவும் நிறைவு என்று எண்ணியது ஆழ்மனம். தியானத்தின் உச்ச நிலையான இயற்றும் தவமே சம சக ஆதி. இதையே மகான்கள் ஞானிகள் நாடுவது. இதுவே வாழ்வின் முழுமைப் பேறு. இதுவே ஜீவ ஐக்கிய பரம முக்தி. வைரம் தன்னை வைரமாக்குவதற்குப் பல நூற்றாண்டு ஆகிறது. இங்கே கருவறையில் வைரத்தை உருவாக்கிய தாயைக் காண்கிறோம். இல்லற வாழ்வில் இருந்துகொண்டும் சமூகத்தோடு வாழ்ந்துகொண்டும் இறைவனை அறிந்து கொள்ளலாம் எனத் தன் மகனுக்கு ஞான அறிவை ஊட்டிய தாய்.

ஆலய அர்ச்சகர்கள் கண்ணீர் மல்க அம்மா என்று சொல்லி அழுவதைக் கண்டேன். பிள்ளைகளுக்கு மட்டும் தாயல்ல; எல்லோருக்கும் கருணை கொண்ட தாயாகக் காண்கிறோம். உதிரத்தை நனைத்துப் பெற்ற மகனை மார்போடு அணைத்து அமுதூட்டினாய். மகனோ தன் மார் மீது அணைத்து கண்கள் கலங்கி தேவாரம் பாட மாதாவின் கண்களில் நீர் வழிந்து மகனின் மார்பை நனைக்க இமைகள் இறுகியது, இருள் கௌவியது. இறைநிலையோடு இணைந்தது. கருவிலேயே திருவுடையாரைப் பெற்றாள் தாய். மகன் மார்போடு அணைக்க அதுவே அதுவானது. கடல் நீரில் விளைந்த உப்பு அது தன் மூலமான கடலின் ஆழத்தைக் காண முயன்றபோது அதுவே அதுவானது.

பாக்கியம் பெற்றவர்கள் மாதாவும் மக்களுமே.

**வாழ்க வையகம் வாழ்க வளமுடன்......**

**மனவளக்கலை யோகா**
**அருள்நிதி மு.ரோ. தவரத்தினம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளக்குமுறல்

தவழ்ந்த மண் வாசனை தனை நுகர்ந்து (கூடி)
வாழ்ந்த சுற்றம் நாடி குதூகலித்துக் கொண்டாடி
இங்கு வந்து மக்கள் பேரமக்கள் உச்சிமோந்து உரையாடி
தொந்திவலி வாட்ட வைத்தியம் நாடினாய் அம்மா.

மனை கூட்டிச்செல்ல மக்கள் கரம் பிடித்தார்
மனம் அமைதி கொள்ள மகனோ மடி தந்தான்
வினை தீர்ந்து விடைசெல்ல வினாடி வந்த
கணம் தன்னை கண்மணிகள் அறிந்திருக்க ஞாயமில்லை.

முத்துக்கள் மிளிரப் புன்முறுவல் மின்ன
தித்திக்கப் பேசி எம்மையெல்லாம் அரவணைத்த அன்புரு
கண்மூடி கண்ணுறங்க காண மறுக்கும் விழிகளும்
எண்ணங்கள் யாவையுமாய் ஆக்கிரமித்தே சென்றதுமேன்?

தனிமையில் நீ உறங்கத் தவிக்கும் புதல்வியரும்
தன் கடமை செய்யத் தயார் செய்யும் தனயன் தானும்
உமை சூழ்ந்த சுற்றமுடன் ஊர் அயலும்
அமைதிபெற தேற்றம் தர எம்மாலே இயலவில்லை.

ஞானேஸ்வரித் தாயே ஞானவொளி அடைந்தவளே
புவனத்தில் எம் மக்கள் உறவுகளும் அமைதிபெற
அருள் நல்கி நீயும் ஆண்டவனார் அடி தன்னில்
அமைதி கொள்வாய் அம்மா சாந்தி சாந்தி!!!

**உற்றார், உறவினர், நண்பர்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயே போற்றி போற்றி

சீர் இணுவை மண் தந்த பரம்பொருளின்
அணுவின் ஓர் அணுத்துகளின் உயிரே - எம்
உயிர் உயிர்பெறு கருவறை சுமந்த
உடலத்தை ஆண்ட இறையே - உங்கள்
உதிரத்தைப் பாலாய் ஊட்டி வளர்த்த
உண்மை உயிர் அன்பே - எமக்கு
சசியென குமாரென தனமென நிதியென
பதியினில் நாமம் தந்தவளே போற்றி.

தாலாட்டி சீராட்டி தரணியில் உயர்வுற
அமுதொடு அறிவுரை தந்தாய் போற்றி
ஞாலத்தில் வாழ்வது எமக்கெனவென்றே
கண்ணின் இமையாய் காத்தாய் போற்றி
எண்ணிய காரியம் ஈடேற நிறைவுற
எமக்கென எல்லாம் ஈந்தாய் போற்றி
கல்வியில் உயர்வுற பள்ளியில் சேர்த்து
நல்லவை கற்றிட உழைத்தாய் போற்றி.

கோழியின் இறக்கையில் வாழும் குஞ்சுபோல்
வாழ்வினில் எம்மை வளர்த்தாய் போற்றி
இளமை மிளிர்ந்து பருவம் தேர்ந்து
இனியவர் கரம் தந்து மகிழ்ந்தாய் போற்றி
எம் உயர்வே உன் நிறைவாய்
பரம்பொருளின் பதம் பணிந்தாய் போற்றி
பேரக்குழந்தைகள் செயல்தரு குறும்புகள்
ஏற்று மகிழ்வுடன் அணைத்தோய் போற்றி.

தாயின் கடமையை உன்வழி தன்னில்
உணர்த்தி வெளியில் கலந்தாய் போற்றி
எம் கண்கள் விழிக்க சிவபுராணம் கேட்டபடி
ஞானஒளியொடு ஒலியுமாய் கலந்தாய் போற்றி
அன்பு கலந்த அறநெறி காட்டி
எம்மை ஆழ வந்தாய் போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் நெஞ்சில் நீக்கமற உறைந்து
எங்கும் நிறைந்தாய் அம்மா போற்றி போற்றி.

அன்புறு தாயே ஆசி நல் குருவே
அறிவுரை தோழியே தெய்வமே ஆயினாய்
சேயென வாழும் யாம் வாயினும் மனத்தும்
தாயின் நின் பணியினைத் தொடர்வதே எம்பணி....

நாளும் பொழுதும் எம்மையெல்லாம் உம்முள் இருத்தி நன்றே
- புகட்டி
வாழும் உடலம் நிலையிலை வாழும் வாழ்வியல் நிலையெனக்
- காட்டி
சேயின் பாதி சேயெனவெண்ணி இணைந்தே மகிழ்வும்
- கொண்டாடி
வாய்மையை உணர்த்திடும் வாழ்விடம் தேடி வானவர் ஏற்க
- ஏகினாய்.

வாழி! வாழி!

**பிள்ளைகள்:**
**சசிகலா, சசிக்குமார்,**
**தர்மேஸ்வரி, நிவேதினி**
**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16.08.2013 வெள்ளிக்கிழமை இறைபதம் எய்திய தர்மலிங்கம் ஞானேஸ்வரி அவர்களுக்கு நெஞ்சார்ந்த அஞ்சலி

**அன்னை மடியில்**
17.03.1946



**இறைவன் அடியில்**
16.08.2013

இணுவையம்பதி தந்த ஞானேஸ்வரி அம்மை - இல்லறத்தில்
இணையாக வந்த துணைவாளன் நடுக்கடலில் இறைசேர
துடுப்பிழுத்து துணிவோடு போராடி ஊர் போற்றும் மக்கள் தந்து
தூங்கும் தாய்க்கு எம் நெஞ்சார்ந்த அஞ்சலி!

நிழலில்லா வெளி தன்னில் வெந்து நொந்து போராடி
காலத்தின் கடமை செய்யும் கண்ணாளன் தந்தாய் நீ
துணையில்லா வேளையிலும் துணிவோடு போராடி
மண் போற்ற வாழும் மங்கையரைத் தந்தாய் நீ

அன்னையைத் தெய்வமென நெறியுரைத்த அறனூற்கு
உயிர் தந்தாய் உளம் யாவும் நிலை கொண்டாய்
உயர்புகழ் கொண்டாய் பூலோகம் நிலை கொண்டாய்
புண்ணியம் தனைக் கொண்டாய்
நிறைவோடு கண்ணுறங்கு நிம்மதியாய்க் கண்ணுறங்கு
இறையோனின் காலடியில் இனிதே கண்ணுறங்கு.

உறங்கும் நிலை தன்னில் உயிர்த்தெழும் ஞானம்
தங்குமிடமெல்லாம் தழுவும் ஈஸ்வரித் தாயே
உறங்கம்மா உறங்கு உம்மக்கள்
திறம்படு செயலால் - உன் பெயர் துலங்கும்
துலங்கட்டும் உங்கள் பெயர் மேதினியில் ஓங்கட்டும்
உங்கள் ஆத்மா அமைதிபெற்று உயர்வோடு வாழட்டும்.

**உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்**
**தமிழ் பெற்றோர் பேரவை பூர்க்டோர்வ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சைவநெறிக்கூடம்
# Der Verein Saivanerikoodam

ஞானலிங்கப்பெருமான் திருவடியில்,
சிவருசியின் மடியில்
16.08.2013 வெள்ளிக்கிழமை
திருவடிப்பேறு பெற்று
சிவகாமிய "ஞானேஸ்வரி"
தாயாருக்கு
எமது வணக்கங்கள்....



எம் நெஞ்சம் நெகிழ்ந்துருகவைக்கும்
செஞ்சொற் "சிவருசியை" தந்த அன்னையே
வண்டமிழ் ஐந்தெழுத்து சிவ மந்திரமோ
ஞானோ தயமோ நீ ஞானேஸ்வரியே,
வானோர்காண பாதுபாகனடி பேறு பெற்றாய்
விடமுண்ட எமையாண்ட சிவமான
சிவமே,
தமிழ் பாடும் பணியால் சைவநெறிக்கூடம்
ஆடும் தில்லைக்கூத்தா நின்னடி தொழுகிறோம்,
அன்னை நின்னடியில் திருப்பேறு காணவே
நமச்சிவாய நமச்சிவாயவே....

அருணைமலை ரமணர் பகர்ந்த முறையில்
மடியில் "சிவருசி" சிவ மந்திரமோத,
முப்போதும் திருமேனி தீண்டும் திருக்கரம்
தப்பாது சிவமோத திருவடிப் பேறெய்தி
வினையா வையும் வண்டமிழ் சாய்க்க
சிவத் தேரேறிய திரு ஞானேஸ்வரியே,
தமிழ் பாடும் பணியால் சைவநெறிக்கூடம்
ஆடும் தில்லைக்கூத்தா நின்னடி தொழுகிறோம்,
அன்னை நின்னடியில் திருப்பேறு காணவே
நமச்சிவாய நமச்சிவாயவே...

அம்மா நீ சும்மா என்றும் இருக்காயே
பெம்மான் கதைபேசி சிவசிவ எனப் புகழ்பாடி
ஞானாம்பிகையும், ஞானலிங்கப்பெருமானும்
ஞானவைரவரும் எனத் திருப்பொருள் தேடி,
சைவநெறிக்கூடமும் ஞானலிங்கேச்சரமும்
ஓயாது நீ கண்ட மெய்வாய் வழியாகும்,
தமிழ் பாடும் பணியால் சைவநெறிக்கூடம்
ஆடும் தில்லைக்கூத்தா நின்னடி தொழுகிறோம்,
அன்னை நின்னடியில் திருப்பேறு காணவே
நமச்சிவாய நமச்சிவாயவே...

பேராசை யெனும் பிணியிற் பிறளாது
மாலறியா விமலன் பேறுபெற்றாய்,
உன் குடியும் குலமும் சைவநெறிக்கூடமாக
ஞானலிங்கப்பெருமான் திருக்குலத்தில் வந்தாய்,
என்னே விதியின் பயன் மதிவெல்ல
நிகர்வாழ்வு தந்தாள் ஞானாம்பிகை,
தமிழ் பாடும் பணியால் சைவநெறிக்கூடம்
ஆடும் தில்லைக்கூத்தா நின்னடி தொழுகிறோம்.
அன்னை நின்னடியில் திருப்பேறு காணவே
நமச்சிவாய நமச்சிவாயவே....

நீ இல்லே எனும் முகமாயையில்
பொல்லா அறியாமையில் சிக்காது,
விதி காணும் உடம்பு நீக்கி
திருப்பெருந்திரு திருவடியில் மலர்கவே,
சாகா சாலங்களில் யோகா சிவஞானசித்தரும்
குருமார்களும் ஆறா நெஞ்சங்கள் ஆற்றவே
தமிழ் பாடும் பணியால் சைவநெறிக்கூடம்
ஆடும் தில்லைக்கூத்தா நின்னடி தொழுகிறோம்,
அன்னை நின்னடியில் திருப்பேறு காணவே
நமச்சிவாய நமச்சிவாயவே...

எம்பெருமான் திருவடியில் அன்னை
திருவடிப்பேறுபெற்ற இவ்வேளை, அவரை
இழந்து தவிக்கும் அன்னாரின்
குடும்பத்தினர், துயர்கடந்து தம்மை
ஆற்றுப்படுத்தி நலம் அடைய
ஞானாம்பிகை உடனாய
ஞானலிங்கப்பெருமான் திருவடிகள்
வேண்டி அமைகிறோம்.

**Laubeggstrasse.21, 3006 Bern, Schweiz**

Mobil Nr. : 078 645 3042, 079 275 6862, 076 437 48 96, 078 7599972/ Telefon: 031 302 09 56
WWW.saivanerikoodam.chinfo@saivanerikoodam.ch/saivanerikoodam@hotmail.ch
saivanerikoodam/facebook.comyoutube.com/saivanerikoodam



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தை குரு தெய்வமாகி நின்ற தாய்

விந்தை மிகு உலகம் எனினும் விளை பயிர்க்கு வேலியாகத்
தந்தை தாய் இருவர் பேணத் தரணியில் வாழ்வு சிறக்கும்
கந்தை தான் உடையே எனினும் காவலாய்த் தந்தை நிற்பர்
சிந்தை விருத் தெரிய முன்னர் தந்தையை இழந்த பயிர்நாம்.

நொந்து இவ் வுலகில் எம் தாய் நோய்நொடி தாங்கி நின்று
சிந்தை சேர் துணிவு கொண்டு சீராக வளர்த்தாள் எம் வாழ்வு
மந்தையில் ஒன்றென் றாகாது மலைமேலே வைத்த விளக்காய்
முந்தியே எவர்க்கும் தெரிய முதல் நிலை இருத்தி நின்றாள்.

புலம் பெயர்ந்த காலை அவள் எம் புலன் பெயர்ந்து போகாமல்
நலம் தரவே தானும் தொடர்ந்து நமை வளர்த்த நிலை போலெம்
குலம் வளர்த்து நலம் சேர்த்தாள் குவலயத்தில் தமிழ் விளங்கப்
பலம் சேர்த்தாள் பண்பாட்டைப் பக்கதுணையாய் இருந்தளித்தாள்.

**தாயாகி** நின்றாள் முதன் மகள் ஒன்பதகவை அடைய
மூவர் அவள் பின்னொன்றாகத் **தந்தை**யுமாகினள்
பேயாகி அரசு எமைப் பின்தொடர்ந்து தாக்கிவரப்
பேதலித்துத் தம்முயிரைப் பேணிடவோர் இடமின்றி
நாயாகத் தமிழரினம் நாடெல்லாம் அலைகையிலே
நன்மைதரு வழிகளினை நயந்தருளும் குருவாகினள்
ஓயாது எமக்காகத் தனை வருத்தி ஒளிதந்து நிறைவினிலே
**ஓம்** ஆகிச் சிவனுமையோடு இணைந்து **தெய்வ**மாகினள்!

**அமரத்துவம் எய்திய அன்னையின் நினைவாக அவருடைய பிள்ளைகள் சசிகலா, சசிகுமார், தர்மேஸ்வரி, நிவேதினி, மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

**(அன்புடன் யாத்தவர்: பாவலர் கந்தையா இராஜமனோகரன் - பிரித்தானியா)**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழித்தோன்றல்ச் சுவடு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தாயகத்தில் என் தாய், என் கைபிடித்து...



திருக்கோவில் சென்று இளைப்பாறும் அன்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருக்கோவில் வாசலில், நான் குடியிருந்த கோவில்...



மாலைப்பொழுதில் அன்னையுடன் ஒருநாள் . . .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஈழத்துச் சிதம்பரத்தில் திருக்கோவில் வழிபாடு...



யாழில் ஞானலிங்கப்பெருமான் திருக்கோவில்
அடிக்கல் நாட்டுவிழா
கண்ணுற்று மகிழ்ச்சியில் அன்னை...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளைகளுடனும் பேரப்பிள்ளைகளுடனும்
## ஞானேஸ்வரி அம்மையார்








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தனது தம்பி காந்தி என அழைக்கப்படும் தில்லையம்பலம் அவர்களுடன்,
தாயகத்தில் நிறைவாகச் செய்த பயணத்தின்போது...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தெய்வத்தமிழில் வழிபடுவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தித்திக்கும் தீஞ்சுவை
# தெய்வத்தமிழில் வழிபடுவோம்

சைவசமயத்தினை எம் இளந்தமிழ்ச் சமூகம் புலம்பெயர்ந்து வாழும் வெளிநாடுகளில் வாழத்தக்க வகையில் வழங்கப்பட வேண்டும் எனும் உயரிய நோக்கில் சைவநெறிக்கூடம் சுவிஸ் தலைநகர் பேர்ண் மாநிலத்தில் 1994ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இந்நோக்கினை நடைமுறைப்படுத்தும் திருச்செயலாகவே பண்ணாய்ந்த பெருமான் ஞானாம்பிகை உடனாய ஞானலிங்கப் பெருமானாக ஞானலிங்கேச்சுரத்தில் எழுந்தருளிக் கருவறையில் செந்தமிழ் வழிபாடுகண்டு, செழிப்புடன் அருளாட்சி செய்து வருகிறான். இப்பெருமானே ஐரோப்பாவில் முதல் முறை "சென்றதுபோக இனிக் கருவறையில் செந்தமிழ் வழிபாடே நடைபெற வேண்டும் எனும் உலக சைவத்தமிழ் மாநாடு" கண்டபெருமான் ஆவார்.

தமிழ் மொழியும் சைவமும் எழுந்த காலமும் அண்ணளவாகக் கணிக்கப்படுகிறதே தவிர, வேறு மொழிகள் போல் கால எல்லைக்குள் அறுதியிட்டுக் கூறமுடியாப் பழமைகொண்டது எமது சமயமும் மொழியுமாகும். சங்ககாலம், பல்லவர் காலம், இருண்டகாலம், சோழர்காலம் முதல் இன்றைய காலம்வரை எம்மிடையில் திருவருட்செல்வர்கள் பலர் தோன்றி உள்ளார்கள். சைவத்திற்கும் சமயத்திற்கும் பெரும் பணி ஆற்றி உள்ளார்கள். சைவநெறிக்கூடத்தினை நிறுவுவதில் முன்னின்று உழைத்த தொண்டரில் "சிவருசி" தர்மலிங்கம் சசிக்குமார் அவர்களும் இப்படி ஒரு திருவருட்செல்வரே ஆவார்.

உலகத்தில் எம் தாய்மொழிகாலப் பழமை, யாப்பியல், இசைவடிவங்கள் என முத்தமிழ் வடிவுகொண்ட செம்மொழி யாகும். இன்றைய 20ஆம் நூற்றாண்டின் எமது சைவசமயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்துப் பல ஆய்வுகளை செந்தமிழ் வேள்விச் சதுரர் மு.பெ. சத்தியவேல் முருகனார் அவர்கள் செய்து, செந்தமிழ் வழிபாட்டுக் களஞ்சியம் ஒன்றைத் தமிழ் உலகிற்கு வழங்கி உள்ளார். திருமந்திர மணி படைத்த படைப்பினைப் பிளிந்து தேனாகவும் பாலாகவும் சிவருசி செந்தமிழில் வழிபடுவோம் எனும் சிறுநூலைத் தொகுத்துள்ளார்.

இச்சிறியதோர் நூல் எமது சமயத் திறனாய்வு நூலாகவும், சைவத்தமிழ் உலகினைத் தாய் மொழியில் வழிபாடுசெய்ய அறைகூவல் விடுக்கும் சங்குநாதமாகவும் அமைந்துள்ளது. பல ஆயிரம் ஆண்டுகள் தோன்றி வளர்ந்த சிறந்த எம் தமிழ் மொழியின் சிறப்பினையும் சைவத்தின் ஆழத்தினையும் சில வரிகளில் கொடுக்க முடியாது. ஆனால் அதன் உண்மைச் சான்றை சத்தியவேல் முருகனார் ஐயாவும் சிவருசியும் நிறைவாகவே அளித்துள்ளனர்.

செந்தமிழ் வழிபாட்டில் பொதிந்துள்ள அரிய உண்மை யினை வெளிப்படுத்தும் இந்நூல் தமிழின, சைவசமய மற்றும் சமூக ஆர்வலர்கள் பாராட்டும் வகையில் அமைந்துள்ளது. தமிழ் மொழிப் பற்றும், ஆர்வமும் இருப்பினும், பழம் பெரும் இலக்கி யங்களைக் கற்றுணர்ந்து அறியாத அல்லது அறிய வாய்ப்பற்ற அன்பர்களுக்கு, செந்தமிழ் திருமறையினைப் புரியும்படி மு. பெ. சத்தியவேல் முருகனார் படைக்க, அதனை மேலும் இலகுபடுத்தி ஐரோப்பாவில் பிறந்து வளரும் பிள்ளைகளும் வாசித்து அறிய வாய்ப்பாகப் படைத்துள்ளார் சிவருசி. எமது சமயத்தின், மொழி யின் அனைத்து உண்மைச் செய்திகளையும் தன்னுள்ளே அமையப் பெற்றுள்ள திருப்பொற் களஞ்சியமாகவே இந்நூல் திகழ்கிறது.

கருவறையில் செந்தமிழ் திருமறை வழிபாட்டினை எதிர்பார்த்திருக்கும் அன்பர்களுக்குத் தீஞ்சுவை இந்நூல். தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயைப் பூசிப்பவனால் மட்டுமே தன் தாய்மொழியையும், சமயத்தினையும் உண்மையுடன் ஒழுகமுடியும். இவர் இப் படைப்பினைத் தன் தாயார்க்கு அர்ப்பணித்திருப்பது, இவர் தன்னைத் தமிழிற்கும் சமயத்திற்கும் அளித்திருக்கிறார் என்பதையே காட்டுகிறது. இந்நூல் சிவருசி ஐயா அவர்களின் தாயாரின் நினைவாக வெளிவருவதும் எம்பெருமான் கருணையாகும்.

சைவத்தமிழினம் இந்நூலை கரம் கூப்பி வரவேற்பதுடன், இதன் உள்ளடக்கத்தை எம் இளந்தமிழ்ச் சமூகத்திற்குக் கிடைக்கச் செய்ய வேண்டும்.

**செந்தமிழ் வழிபாட்டுச் சீலர்கள் திருப்பாதம் தொழுது**
**அன்புடன் சிவமகிழி, சுவிஸ்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

# செந்தமிழ்ப் பணிசிறந்தொழுகவே

உள்ளன்புமிகு சைவத்தமிழ்ப் புண்ணியர்களே,

அருள் ஞானமிகு ஞானாம்பிகை உடனாய ஞானலிங்கேச்சுரர் பொற்பாதம் பணிந்து, இறையருளாளர்கள், சித்தர் பெருமக்கள், யோகியர், ஞானியர் உறவு கைகூடிநிற்க உலகெங்கும் உள்ள திருக்கோவில்களில் செந்தமிழ் திருமறை வேள்வி ஓங்கி ஒலிக்க, அப்பணியில் உடனிறங்கி, சைவசமயத்திற்கு மூலமான இலக்கியம் என்று போற்றப்படும், திருமந்திரத்தையும், திருமுறைகளையும் மீண்டும் வகுத்து, தமிழில் உதவுக என்ற இறைபேராளர்களின் கட்டளையினை ஏற்று உணர்ந்து நிற்கின்றது சைவநெறிக் கூடம்.

ஐயறிவு உயிர்களாகிய பசுக்களின் துயரத்தை, இறைவன் திருமூலர் மூலம் போக்கியது போன்று, ஆறறிவுப் பசுக்களாகிய உயிர்கள் தமிழாகமத்தை தொலைத்துவிட்டு துயர் உறுகின்றன. இங்கேயும் ஆகமம் சிவபெருமான் முன்னம் அருளியதென்பது கூறப்பட்டுள்ளது. அதனை மீண்டும் அருளவேண்டும் என்பதால், அது விதியின் காரணத்தால் மறைந்து போயிற்று என அறிகிறோம். திருமூலர் வாக்கினால் தமிழ் வகுப்ப என்பதனால் முன்னால் அது இறைவன் வாக்கினால் தமிழில் கொண்டுவரப்பட்டுள்ளான் என்பது புலனாகின்றது. எனவே திருமூலர் வரலாற்றில், தமிழர் ஆகமாக மலர்ந்த வரலாற்றினை அறிகின்றோம். இதனை மேலும் செப்பனிடப்படுவதுடன், தமிழ்முறைப்படுத்தப்பட வேண்டும் என்ற நோக்குடன், இமையம் முதல் குமரிதாண்டி தாய்மண் வாசல் வரை தேடிய தேடலின் உணர்வாய், உந்தலாய் பெற்ற இந்த நூலை செந்தமிழ் ஆகமநூலாக வடிவமைத்து நிற்கின்றது சைவ நெறிக்கூடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகமம் இறைவனை அடையச்செய்யும் நூல் மட்டுமன்று அது இறைவனால் வெளியிடப்பட்டது என்பது தமிழிலக்கியச் சான்றாகும். செந்தமிழ் வேள்விச்சதுரர் இதன்நோக்கினை தன் வாழ்நாள் நோக்காகக்கொண்டு, பெரும் சைவத்தமிழ்த் திருப்பணி ஆற்றி வருகிறார். இவர்தொகுத்த நூல்களின் சாற்றினை சிவருசி இன்று தெய்வத்தமிழில் வழிபடுவோம் எனும் கையடக்க நூலாகத் தன் தயாரின் நினைவில் தொகுத்துள்ளார். இந்நூலின் உட்பொருளை படித்து அறிந்து, தமிழாகமத்தின் உண்மை, அனைத்து சைவத்தமிழ் மக்களையும் சென்றடையச் செய்வோமாக.

உலகம் அமைதியாகவும் என்றும் ஆனந்தமாகவும் இருக்க ஞானாம்பிகை உடனாய ஞானலிங்கப்பெருமான் திருவருள் புரிவாராக.

மூலமும் அறியும் முடிவும் அறியும்
ஞாலத்து சிவஞானசித்தர்பீடத்து சித்தர்காள்
உண்மையின் உரை நின்று உரைத்தது
"பிரியாவினைப் பயன் பிரிந்து
ஞானேஸ்வரி சிவஞானபரவீடு கண்டாள்"

எப்போதும் நிலைக்கும் சிவத்துடன் ஞானேஸ்வரி
மக்கள் சுற்றத்தாசை ஒழித்து பரமானாள்!
மாமாயை வனம் சிவருசியும் கடந்தாரே...
விட்டொழியும் மக்காள் பேராசை நீடுவாழ,
நிலையான நிலை பெற்றாள் அன்னை அவள்

சிந்தை தவிக்கிறதுந் தேறினாளே தாயார்
ஆர்க்கு வாய்க்கா பேறு பெற்றாள்
நீர்க்குமிழி நிலையில்லை நிலையானாள் தாய்
சிவருசியின் எண்ணமான அன்புத் தாயார்
ஐந்து புலனு மடங்கியே சிவமுமானார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையற்ற நிலை நிலையில்லை என்று
நிலையான பெருமானை தமிழாலே வழிபட
வேதனை தீர்த்து சத்தியவேல் இயற்றிய
தமிழன்னைப் படைப்பினை ஆர்த்தார் சிவருசி
அம்மா உன் நினைவாக நிலையாக நிலைக்கவே.

வருத்தம் விடுவீர் மக்காள் பிறப்பறுக்கும்
செந்தமிழ் திருமறை வழிபாடு கண்டே,
சிவஞானசித்தர் பீடத்தில் இறப்பில்லை!
பிறப்பறுக்கும் பேரரசி ஞானாம்பிகை,
திருவடிப் பேறளிக்கும் - ஞானலிங்கப்பெருமான் கண்டீர்!

முழுமதி நிறைநாளில் ஞானாம்பிகை நிலவாக
சிவருசித் தாயார் பிறவி கடந்தார்,
பேரொளிப் பிளம்பில் சிவத்தில் திளைத்தார்!
காரணப் பிறவி கடந்து சிவமுமானார்,
திருவடிப்பேறு நிறையெனக் கொண்டார் ஞானேஸ்வரி...

முக்தி அளிக்கும் மோனங் கொடுக்கும்
சித்தி அளிக்கும் அருட் சோலை ஞானலிங்கேச்சுரத்தில்
ஞானாம்பிகை உடனாய ஞானலிங்கப் பெருமான் அடி தொழுது
சிவஞானசித்தர் பீடத்து சித்தர்கள் தொழுதமைகிறோம்
சிவருசியின் செந்தமிழ்ப் பணிசிறந் தொழுகவே.

**யோகர் ஐயா, சிவஞானசித்தர் பீடம்.**
**சைவநெறிக்கூடம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வத்தமிழில் வழிபடுவோம்

இப் பூமித்தாயின் வயிற்றிலே பிறந்த ஒவ்வொரு மனிதனும் பிறந்ததுமுதல் தன் தாய் மொழியிலேயே பேசுகிறான். ஆனால் தமிழ்த்தாயின் கருவிலே தோன்றிய தமிழன் மட்டும் கற்க வேற்று மொழி, பாடுவதற்கு வேற்று மொழி, வணங்கவும் வேற்று மொழி காண்கிறான். இவ் இழி நிலை நீங்க எம்குருவாம் திருமூலவன் உந்துதலால், ஞானலிங்கேச்சுரர் ஆணையதால், கூன் பாண்டியன் கூன் நிமிரவும், சமணம் விட்டு மீண்டும் சைவம் தழுவவும் வழி சமைத்த மங்கயர்க்கரசி அம்மையார் போல், இங்கிலாந்தில் வாழ்ந்து கொண்டிருக்கும், திருமதி பிரேமச்சந்திரன் வசந்தா தேவி அவர்கள் தமிழ் இனத்தின் கூன் நிமிரவும், செந்தமிழ் வழிபாடு எழுச்சி பெறவும் வழிகோலினார். அக்காரணத்தால், தெய்வ முரசின் செந்தமிழ்வேள்விச் சதுரர், சத்தியவேல் முருகனார் தம் திருக்கூட்டும் லண்டன் வாழ் தமிழ் அறிஞர்கள் , டென்மார்க், சுவிஸ் வாழ் சைவத் தமிழ் அறிஞர்களும் ஒன்று கூடி "சைவ நெறிக் கூடம்" அருள் ஞானமிகு ஞானாம்பிகை உடனாய ஞானலிங்கேச்சுரர் ஆலயமும், திருத்தொண்டர் சபை சிவஞானசித்தர் பீடம் சார்ந்த தவத்திரு சிவயோகநாதன் ஐயாவும், அருள்திரு. தில்லையம்பலனாரும் ஒருங்கிணைந்து செந்தமிழ் வழிபாடே தலைசிறந்தது என மொழிந்தனர். இறைவன் பொற்காசு வழங்கி பாடல்களைக் கேட்டு ரசித்த மொழி தமிழ் மொழியே!!!

அதாவது ஞான சம்பந்தரும், அப்பர் பெருமானும் இணைந்து மக்கள் பஞ்சம் தீர்க்கப் பிரார்த்தித்தபோது, இறைவன் ஒவ்வொருநாளும் ஒரு பொற்காசு இருவருக்கும் வைத்து வந்தான். ஏனெனில் ஒரே நாளில் முழுத்தொகைப் பணத்தையும் கொடுத்து வைத்தால், தான் காதார கேட்டு ரசிக்கும் தமிழ் அர்ச்சனைப் பாடல்கள் எங்கே தீர்ந்து விடுமோ என எண்ணிய முதல்வன். நாளும் ஒரு பொற்காசு வழங்கிக் கேட்டதுவும் இத்தாய் தமிழ் மொழிதான். சொற்றதமிழால் எம்மைப் பாடுக. என சுந்தரரைப் பணித்ததுவும், நாவிற்கு அரசன் நீ என அப்பரைப் புகழ்ந்ததுவும், தோடுடைய செவியன் என ஞானக்குழந்தை ஞானசம்பந்தனை தமிழில் பாட வைத்ததுவும், மாணிக்கவாசகா என வாசகரை வியந்ததுவும், உலகெலாம்.... என அடியெடுத்துக் கொடுத்ததுவும் கொடியேற உமாபதியாரை தமிழ்பாடப் பணித்ததுவும் எல்லாம் வல்ல பரம் பொருளான இறைவனிற்கு தமிழ் நன்றாகத் தெரியும் என்பதற்கு எடுத்துக் காட்டுக்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே ஆயிரம் ஆண்டுகாலமாக பலராலும் புறந்தள்ளப்பட்ட செந்தமிழ் வழிபாடு, மீண்டும் மீள் எழுச்சி பெற **16.09.2012** அன்று அருள் ஞானமிகு, ஞானாம்பிகை உடனாய ஞானலிங்கேச்சுரர் ஆலய முன்றலில், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த, சென்றதுபோக என ஆலயங்களில் கருவறைவரை செந்தமிழ் வழிபாடே வேண்டும் எனும் பிரகடனமும் தீர்மானமும் இறை அருளால் அரங்கேறியது தமிழ் மக்களை ஆயிரம் ஆண்டு காலங்களாக மயக்க நிலையில் வைத்த செயல் நீங்க செந்தமிழ் வழிபாடே உண்மை வழிபாடு என நிலை நிறுத்த மலர்ந்ததுவே இக் கைநூலாகும்.

எம்மில் பலருக்கும், தமிழ் வழிபாட்டை இறைவன் ஏற்றுக்கொள்வானா? எனப் பல சந்தேகங்கள் உண்டு. ஏனெனில் மக்களை விழிக்க விடாமல் செய்வதில் பலர் கைதேர்ந்த தந்திரக்காரர்கள். ஆனால் எம்மொழிக்கும் இல்லாத அடைமொழி கொண்டது எம் தமிழ் மொழி "திருவிளையாடல் புராணம்" தந்த பரஞ்சோதி முனிவர் கூறுகின்றார்.

"கண்ணுதற் பெரும் கடவுளும் கழகமொடு அமர்ந்து
பண்ணுறத் தெரிந்து ஆய்ந்த இப்பசுந்தமிழ் ஏனன
மண்ணிடைச்சில இலக்கண வரம்பிலா மொழிகள்போல்
எண்ணிடைப் படக்கிடந்ததா எண்ணவும் படுமோ"

என வினவுவதால் தமிழிற்கு அங்கம் கண்டவன் சிவபெருமானே. இதையெல்லாம் கூறி, தமிழ்ப் பெருமையை மேடைமேடையாய் நிகழ்த்துபவர் பலர். ஆனால் தமிழ் கருவறை நுழைய இத்தமிழரே தடையாய் நிற்பர்.

இது இன்று நேற்றல்ல. இவர்களிற்கு ஒரு பாட்டன் உள்ளான் என மு. பெ. சத்தியவேல் முருகனார் அவர்கள் கூறுகின்றார். அவன் பெயர் குயக் கொண்டான். இவன் தமிழ்ச் சங்கத்தில் நக்கீரர் வீற்றிருந்த அவையில், தமிழ் தாழ்ந்து ஆரியம் உயர்ந்தது எனத் துணிவாகக் கூறியுள்ளான் என்றால் என்ன நெஞ்சழுத்தம். குயக் கொண்டான் என்பது தமிழ்ப் பெயர்தான் ஆனால் ஏன் இந்தப் பிறமொழி மோகம். தாயும் தந்தையும் தமிழராக இருக்க பிறந்த ஒருவன் தன் இனத்திற்கும் குலத்திற்கும் மாறாக உள்ளான் எனில் அது அவன் பிறப்பின் கண் ஐயப்படுதல் தவறில்லை என்று நாம் கூறவில்லை வள்ளுவப் பெருந்தகை கூறியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றென்றும் எம்மைத் திருவருளாலும் குருவருளாலும் அன்புவழிச் சைவன் தழைக்க வழிநடாத்தும் அம்மை அப்பனுக்கும் எம்குருவாம் திருமூலவன் அருட்கமல பாதங்களிற்கும் இம்மலரைக் காணிக்கை ஆக்குகின்றோம்.

"நலத்தின் கண் நார் இன்மை தோன்றின் அவனைக் -
குலத்தின் கண் ஐயப் படும்" என்கிறது குறள்.

எனவே சிவாச்சாரியார்கள் ஆரியர்கள் அல்ல. தமிழர்களே. குறிப்பாக ஈழ தேசத்தை சேர்ந்தவர்கள் ஆரியம் எம்முள் புகுத்தப்பட்டுள்ளது என்பதை உணர்ந்து, மீள் எழுச்சி பெறுவதே இக்காலத்தின் தேவை என உணர்ந்துள்ளனர். நக்கீரர் இறைவனிடமே, "நெற்றிக்கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே" என வாதிட்ட உண்மைத் தமிழ்ப் புலவர். அல்லவா? பொறுப்பாரா? இந்த குயக் கொண்டானை

" முரணில் பொதியின் முதற் புத்தேள் வாழி
பரண கபிலரும் வாழி - முரணிய
ஆனந்த வேட்கையான் வேட் கோக்குயக் கொண்டான்
ஆனந்தம் சேர்க்க சிவா"

என்று பாடினார் வேட்கோ குயக் கொண்டான் உடனே விழுந்து இறந்தான். சான்றோர் இரக்கம் காட்டி அவனை எழுப்பித்தர நக்கீரரை வேண்டினார்கள் அவரும்

"ஆரியம் நன்று தமிழ் தீ தௌ வுரைத்த
காரியத்தால் காலக் கோட்பட் டானை - சீரிய
அந்தண் பெறிமையின் அகத்தியனார் ஆணையினால்
செந்தமிழிலே தீர்க்க சிவா"

என்று பாடத் தூங்கி எழுந்தவன் போல் எழுந்தான் என்பது தொல்காப்பிய உரை கூறும் வரலாறு. மீண்டும் மீண்டும் குயக் கொண்டானின் வாரிசுகள் தொடர்ந்து கொண்டு தான் உள்ளார்கள். தன் தாய்மொழி வேண்டாம் எனக் கூறுமளவிற்கு வேற்றுமொழிக் கவர்ச்சி தமிழனை விட்டு நீங்க செந்தமிழ் வழிபாடு கருவறையில் ஒலிக்க வேண்டிய தேவையை கோடிட்டுக் காட்டும் இக்கைநூல் என நம்புகிறோம். தமிழ் மொழியின் தவப்புதல்வன் மு. பே. சத்தியவேல் முருகனாரிடம் இருந்து பெற்ற முத்துக்களே இவை. இவை என் கருத்தல்ல. புலம் பெயர் மக்களின் வாழ்வியல் சூழல் கருதி சுருக்கி வழங்கி உள்ளோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர்கள் சமஸ்கிருதத்தில் தான் வழிபாடு செய்தார்களா?
வட மொழி எல்லா தேசத்திற்கும் பொதுவானதா?
வட மொழி என்பதால் அது வடக்கே முளைத்தது. எனவே பெரிய வழிகள் பாதைகள் அற்ற வாகனப் போக்குவரத்து இல்லாத காலத்தில் எப்படி தமிழ் மக்களிற்கும் பொது மொழி ஆகமுடியும்?
வட மொழி பாரதத்தின் பொது மொழியாக இருந்ததா?
இல்லவே இல்லை. ஏனெனில் பார்வதி பரமேஸ்வரன் திருமணத்தில் வட கோடு தாழ்ந்து தென் கோடு உயர்ந்த வேளை இறைவன் அதனைச் சமப்படுத்த அகத்தியரை ஏவினார். அகத்தியர் தென்கோடி செல்ல முன் இறைவனிடம் சென்று, அங்குள்ளவர் பேசும் தமிழ்மொழி எமக்குத் தெரியாதே என அச்சத்துடன் கூறினார். (திருவிளையாடற் புராணம் சான்று) இறைவன் அவருக்குத் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றுக் கொடுத்து அனுப்பினாராம். பாடல் பின்வருமாறு: -

" விடை கொடு போவன் ஒன்றை வேண்டினான் ஏகும் தேயம்
தொடை பெறு தமிழ் நாடென்று சொல்லுப அந்நாட்டின்
இடை பயில் மனிதர் எல்லாம் இன்தமிழ் ஆய்ந்து கேள்வி
உடையவர் என்ப கேட்டார்க்கு உத்தரம் உரைத்தல் வேண்டு."

சித்தமா சகலவந்தச் செந்தமிழ் இயல்நூல் தன்னை
அத்தனே அருளிச் செய்தி என்றனன் அணையான்தேற
வைத்தனை முதநூல் தன்னை மற்றது தெளிந்தபின்னும்
நித்தனே அடியேன் என்று நின்னடிக் காண்பன் என்றான்.

இதனால் தெரிவது அகத்தியர் வடநாட்டில் இருந்து தென்னகம் சென்று இறைவனைத் தமிழால் வழிபட்டது என்பதே. இதே போன்று இராமாயணத்தில் ஓர் செய்தி, சீதையைக் கண்டுவர அனுமன் தென் திசைக்கு நியமிக்கப்படுகின்றான். அப்போது மதுரைப் பக்கம் போகாதே அங்கே தமிழ்ச்சங்கத்தில் தமிழைப் புலவர்கள் ஆய்வு செய்யும் இனிமை, உனது வேலையை மறக்க வைத்து விடும். என்கின்றார்கள். எனவே அப்போதும் அங்கு வடமொழி இல்லை.
வேதம் - ஆகமம் - தமிழ்
இருக்கு முதலாய நான்கு வேதங்களும் காமிகம் முதலாய இருபத்தெட்டு சிவாகமங்கள் சமஸ்கிருதத்தில் தோன்றியன என்றால் அப்பட்டமான பொய்.

வட வேதங்களிலிருந்து வந்ததல்ல தமிழ்ச்சைவம்
இருக்கு முதலிய நான்கு வேதங்களே என்பது தவறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனெனில் இருக்கு தான் முதலில் தோன்றியது. அதிலிருந்து யாகத்திற்குரிய பகுதிகள் பிரிக்கப்பட்டு யசுர் வேதம் தோன்றியது. இன்னும் சில காலம் கழித்து இசைமயமாக உள்ள பகுதிகள் பிரிக்கப்பட்டு சாம வேதம் உருவானது. இவற்றின் பலகாலம் கழித்தே கி.பி. 7ஆம் நூற்றாண்டில்தான் அதர்வண வேதம் உருவானது. ஆகவே மனு தர்ம ஸ்மிருதியில் வேதம் மூன்று என்று மட்டுமே சொல்லப்பட்டது. "அமரகோசம்" என்னும் வடமொழி நூலும் வேதம் த்ரயே என்றே கூறுகின்றது. அதுமட்டுமல்லாமல் அதர்வண வேதத்தினர் ஏனையோரால் (மூன்று வேதங்கள் உடையோரால்) ஒதுக்கப்பட்டே வந்துள்ளனர். ஆனால் உலகோர் முன் ஏன் ஆரியர்கள் நால் வேதமாக காட்டிக் கொள்கிறார்கள். ஏனெனில் தமக்கும் தமிழர் போன்று அறம், பொருள், இன்பம், வீடு என நான்கும் வேதமாக சொல்லப்படுவது போல் நான்கு வேதங்கள் வடமொழியில் உள்ளதாகக் காட்டிக் கொள்ளவே!

மற்றும் இருக்கு வேதம் தோன்றிய போது அது சமஸ்கிருதத்தில் இல்லை என்பதற்குச் சான்றாக மறைந்த காஞ்சிப் பெரியவர், அது "சந்தஸ்" என்ற மொழியில் உள்ளதாக ஒப்புக் கொள்கிறார். "காஞ்சிப் பெரியவர் பொன்மொழிகள்" என வானதி பதிப்பகம் வெளியீட்டில் காண்க.

ஆக வட வேதங்கள் சமஸ்கிருதத்தில் தோன்றவில்லை. எனவே சமஸ்கிருதம், என்பது வட இந்திய பழங்குடி மக்களின் மொழியும் "பிராகிருதம்" எனும் மொழியும் கலந்து செம்மைப்படுத்தப்பட்டு நன்றாகச் செய்யப்பட்டது. எனப் பொருள் படும்படி வந்தது. அதற்கு முன் ஆரியர் பேசிய மொழி பிராகிருதம். பிராகிருதம் என்பது பீராசீகம் என்ற சொல்லின் அடிப்படையில் எழுந்தது இருக்கு வேதம் பிராகிருத மொழியிலும் இல்லை. அதற்கு முந்திய சந்தஸ் எனும் மொழியில் உள்ளது. என்பது பெரியவாள் கூற்று.

எனவே இருக்கு முதல் மற்றைய வேதங்களை இறைவன் மொழிந்தானா எனக் கேட்டால் இல்லை ஏனெனில் அதை ஏற்பவர்களே அது சுயம்பு தானாகத் தோன்றியது என்பர். எனவே இறைவனை அது ஏற்கவில்லை.

உ+ம் மீமாம்சை, சாங்கியம், யோகம், நியாயம், வைசேடிகம் இந்த ஐவகை தரிசனத்திலும் ஒன்று இறைவன் இல்லை. அல்லது இறைவனுக்கு முக்கியத்துவம் இல்லை. இறைவன் இல்லை என்று புறக்கணிக்கும் இவர்கள், இது இறைவன் மொழியல்ல, சுயம்பு எனக் கூறுகையில் எப்படி வேதங்கள் சிவனால் மொழியப்பட்டது. அதிலும் சமஸ்கிருதத்தில்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆகமம் தமிழிற்கே சொந்தம்:-**

ஆகமம் இறைவனால் அருளப்பட்டவையா? ஆம். ஆரிய வேதம் - ஆகமத்தை ஒப்புக்கொள்ளவில்லை. அதை தாந்திரீகம் என இகழ்ந்தது. ஆகமம் உருவ வழிபாட்டைக் கூறுகிறது. ஆரியர்கள் கொண்டதெல்லாம் தீ வழிபாடும் முப்பத்து முக்கோடி தேவர் வழிபாடும்- ஆகமம் முழு முதற் கடவுள் வழிபாட்டை உணர்த்துகின்றது.

கால வட்டத்தில் ஆரியர்கள் சில ஆகம வழிபாட்டு முறைகளை உள்வாங்கிக் கொண்டனர். வேதங்களும் தரிசனங்களும் ஓர் முதல்வனால் மொழியப்படவில்லை என்னும் போது ஆகமம் இறைவனால் மொழியப்பட்டதா? எனும் வாதத்திற்கு அவர்களிற்கு இடம் இல்லை. ஆனால் தமிழர்கள் ஏற்கின்றார்கள்.

"மன்னுமாலை மகேந்திரமதனில்
சொன்ன ஆகமம் தோற்று வித்தருளியும்" (திருவாசகம்)

இச் சான்றே போதும் தமிழர்கள் ஆகமத்தை ஏற்றார்கள் என்பதற்கு.

**ஆகமம் தோன்றியது தமிழில்:-**

முதலில் வட இந்தியர்கள் ஒப்புக்கொள்ளவில்லை ஆகமத்தை. எனவே அது தமிழுக்கு உரியது. ஆகமம் இறைவனால் மகேந்திர மலையில் அருளப்பட்டதாக மணி வாசகர் கூறுகிறார். இந்த மகேந்திர மலை எங்கே இருந்தது. மகேந்திர மலை குமரி ஆற்றிற்குத் தெற்கே மேற்கு மலைத் தொடர்ச்சியின் கீழ்ப்புறச் சிறகாக இருந்தது என்று வால்மீகி இராமாயணம் குறிப்பிடுகின்றது. இன்று குமரி ஆறும் அதன் கீழ் இருந்த குமரிக் கண்டமும் இல்லை. அவை மூன்று கடல் கோல்களால் தவணை முறையில் கடலின் கீழ் அமிழ்ந்து விட்டன. இதை சங்க இலக்கிய நூல், இறையனார் களவியலிலும் திருவிளையாடற் புராணத்திலும், மற்றும் கடலியல் விஞ்ஞானிகளின் ஆய்வாலும் அறிகிறோம். எனவே குமரிக் கண்டத்தில் வாழ்ந்தவர்கள் தமிழர்களே. தமிழிற்கு சங்கம் கண்ட இறைவன் அங்கு தமிழ் முனிவர்களிற்கு பேசினானா இல்லை உணர்த்தினான்.

சொற்பிரிவிலாத மறைபாடி நடமாடுவர் தொல் ஆணை புரிவை..... என்று தொடங்கும் ஞானசம்பந்தர் பாடல் சான்று பகர்கிறது. அதாவது சொல்லா நிலையில் உணர்த்தினான். உணர்ந்த முனிவர்கள் அதைத் தமிழில் மொழிந்தனர். எனவே ஆகமம் தமிழில் தோன்றிய போதும் பல கடல் கோள்களால் மறைந்து போயின. மீண்டும் இறைவன் 3000 திருமந்திர மொழியால் ஆமகமங்களைத் தமிழிற்கு வழங்கினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகமங்கள் உரை செய்ய வட நாட்டில் தோன்றியிருக்குமானால் ஏன் ஆயிரத்தெட்டு ஆலயங்களும் தமிழ் நாட்டில் உருவாக வேண்டும். (ஆகமமுறை உள்ள) அவை வட நாட்டில் இல்லை. தமிழர் சொத்து தமிழில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டதை உணர்க.

"வித்தியாந்திரே தட்சிணே தேசே
சைவோற்பத்தி பீரகீர்த்தி த ஹா"
என்பது காரணாகம வசனம். தென்னகத்தில் இருந்தே ஆகமம் உலகெங்கும் பரவியது. என்பது பொருள் ஆனால் வட மொழியில் ஆகமங்கள் மொழி பெயர்க்கப்பட்டன. (7ஆம் நூற்றாண்டில் மொழி பெயர்க்கப்பட்டது.) அதற்கு அச் சொல்லே சான்று. ஆகமம் என்ற வடமொழிச் சொல்லுக்கு வந்தது என்று பொருள். இது தமிழில் இருந்து வடமொழிக்கு வந்தது. ஆகமத்தை வட வேதத்தினர் ஏற்கவில்லை எனில் ஏன் மொழி பெயர்த்தார்கள்.

கி. பி. 6ஆம் நூற்றாண்டின் பகுதியில் ஆரியர்களை பல்லவ மன்னர்களின் ஆட்சி காஞ்சியில் நிறுவப்பட்டது. தமிழர்களான சிவாச்சாரியார்கள் தம் ஆலய உரிமத்தைக் காப்பாற்றுவதற்காக வடமொழியில் ஆகமத்தை மொழி பெயர்த்தார்கள். சிவாகமங்களில் பௌத்தம், சமணம், ஏகான்ம வாதம் என்பன மறுக்கப்படுகின்றன. என்ற சைவ ஆகமங்கள் ஓர் அறிமுகம் என்னும் நூலில் முனைவர் எஸ். பி. சபாரத்தினம் அவர்கள் தெளிவாகக் குறிப்பிடுகின்றார். எனவே ஏகான்ம வாதியான சங்கரர் முன்னெடுத்த காலம் கி.பி. 7ஆம் நூற்றாண்டு என்பதால் அப்போதுதான் அது வடமொழியில் மொழி பெயர்க்கப்பட்டது என்பது நிருபணம் ஆகிறது.

பலர் திருமுறைகளையே மேற்கோள் காட்டித் தமிழ் வழிபாட்டினை மறுப்பர். அவர்களிற்கான தெளிவாக இதனை வழங்குகின்றோம்: -
" ஆரியத்தொடு செந்தமிழ் பயன் அறிகிலா அந்தகர்
ஆரியன் கண்டாய் தமிழ் கண்டாய்"

மானினேர் விழி மாதராய் ..... எனும் திருவாலவாய் பதிகம் மதுரையில் ஞானசம்பந்தர் சமணரை எதிர் வாதிட்டு நிற்கும்போது இவர் குழந்தையாயிற்றே, சமணர்கள் பொல்லாதவர்கள் என மங்கயற் கரசியார் கலங்கினராம். அவரது வாட்டம் போக்க சம்மந்தர் பாடிய பாடல்,
"சந்து சேனனும் இந்து சேனனும் தருமசேனனும் கருமைசேர்
கந்து சேனனும் கனக சேனனும் முலாகிய பெயர் கொளா
மந்தி போல் திரிந்து ஆரியத்தொடு செந்தமிழ் பயன் அறிகிலா
அந்தகர்க்கு எளியேன் அலேன் திரு ஆலவாய் அரன் நிற்கவே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதாகும்.

எனவே தமிழில் வரும் ஓர் ஆணின் பெயர் விகுதியில் "அன்" என்று வர வேண்டும் என்பதுபோல் சமஸ்கிருத இலக்கணத்தில் விதி இல்லை. இந்து, தரும என்ற சொற்களுடன்"அன்" என தமிழைச் சேர்த்து மக்களை நெருங்க யுக்தியாகக் கையாண்ட இவர்கள் தமிழையும் அறியார். ஆரியத்தையும் அறியா மூடர் இவர்களிடம் நாம் ஆலவாய் அரன் காவல் பெற்றவர் இளிவுபடோம். என்பதையும் தமிழைப் பிழையறக் கையாள வேண்டும் என்பதையும் உணர்த்தி உள்ளார்.

சம்பந்தருக்கு ஞானப்பாலை அம்பிகை கொடுத்து ஆண்டது போல் என்னையும் ஆளாயா? என சௌந்தர்ய லகரி (சுலோகம் 75) எனும் நூலின் கூறுவதால் இவர்க்கு முன்னையர் ஆள ஞானக் குழந்தை இருந்த காலம் தமிழ் வழிபாடே எங்கும் இருந்தது என்பது உண்மை. எனவே காமிகாமகம் வட மொழியில் கி. பி. 7ஆம் நூற்றாண்டே தோன்றியது. எப்படித் பார்த்தாலும் "திருமந்திரம்" 5500வருடங்களிற்கு முந்தையது என்றும், கி.பி-5ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்றும் வரலாற்றாசிரி யர்கள் கூறியதால் திருமந்திரம் வடமொழியாக ஆகமத்திற்கு முந்தையதே, அத்தோடு வடமொழியில் மொழி பெயர்க்கப்பட்ட ஆகமத்துக்குப் பேருரை எழுதிய உரையாசிரியரான சத்தியசோதி சிவாச்சாரியார் கி.பி.8ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். என்பதை வட மொழி ஆகம வல்லுனர் எஸ். பி. சபாரத்தினம் நிறுவி உள்ளார். இங்கும் கூட வட மொழி ஆகமம் என்னும் சொல் "வந்தது" என்பதைக் குறிப்பதால் தமிழில் இருந்து வந்ததுவே என்பது பொருள்.

**திருமுறை :-**

ஆரியன் கண்டாய் - தமிழன் கண்டாய்

இது உலகவர் அனைவருக்கும் இறைவன் ஒருவனே என்பதாகும். ஏனெனில் ஆரியர்கள் முழுமுதல் கடவுளை ஏற்றவர்கள் அல்ல. இன்னும் சொல்லப் போனால் அவர்களின் ஐவகைத் தரிசனங்களும் மீமாம்சை, சாங்கியம், யோகம், நியாயம், வைசேடிகம் என்பவை முதல்வனை ஏற்கவில்லை. அவர்கள் தமிழரின் சிவவழிபாட்டைக் கேலி செய்தனர். இதற்கான சான்று "ரிக்" வேதத்தில் உள்ளது. சிசினதேவன் எனச் சிவனைக் கேலி செய்ததாக ரிக் வேதத்தில் வருகிறது. பிற்காலத்தில் ஆரியன் கண்டு ஆய் தமிழன் கண்டாய் என்று பொருள் பட பிரித்துக் கண்டால் (இது பிரிமொழிச்சிலேடை) என்று இலக்கணம் கூறும். ஆரியன் இந்தியாவின் கைபர் கணவாய் வழியாக நுழைந்து கண்டு ஆய்ந்து ஏற்ற தமிழன் சிவபெருமான் என்பது அதன் பொருள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி திருமுறை சொல்லாட்சியில் (மறை என்பதன் பொருள்)
" மறை நாலும் தம்பாட்டென்பர், மிக்க வேத மெய்நூல் தெருளும் நான்மறை, பண்டாய நான் மறை முடிவில்லா வோத்துசுருதி மறை நான் கான செம்மை, ஆரணம் பொழியும் பவள வாய் வைதிகத்தின் வழி ஒழுகாது, அவக்கைதவம் இருக்கு நான்மறை சந்தோக சாமம் ஓதும் வாயான், வேத வேதாந்தன் வேதாந்த நிலைக்குறி, மந்திரமும் தாமே அன்பர் தமக்கு ஆகம நூல் மொழியும்"

எனவே மேற்கூறிய சில பதிகவரிகளைத் தமக்குச் சாதகமாக வேதங்களும் ஆகமங்களும் சமஸ்கிருதம் என வாதிட முனைவோர்க்கு இது உண்மையில் எதை உணர்த்தும் எனக் காண்போம்.

**பண்டாய நான்மறை:-**
இச் சொல்லே இந்நான் மறைகள் பழையன எனக்கூறும். எனவே புதிய வட வேதமல்ல ஏனெனில் அவர்களே அதைச் சுயம்பு (தான் தோன்றி) என்கின்றார்கள். ஆகவே பண்டு இறைவன் மொழிந்த நான் மறைகள் இவை எனச் சம்பந்தர் பழமலை ஊரில் பாடிய பாடலால் தெளிவு படுத்துகின்றார்.

"அழிந்த சிந்தை அந்தணாளர்க்கு
அறம் பொருள் இன்பம் வீடு
மொழிந்த வாயான் முக்கண் ஆதி
மேயது முதுகுன்றே"
என்பது அவர் வாக்கு.

**பண்டாய நான் மறை :-**
எனப் பாடிய மணி வாசகர் இவர் திருச்சாழலில் அறமுதலா நான் கனைத்தையும் முனிவர்களுக்கு அளித்தார். சிவபெருமான் என்று பாடுகின்றார்.

**பதிக நான்மறை :-**
வட மொழி வேதங்கள் பதிகங்களாகப் பாடப்பட்டவை அல்ல அவை சூக்தங்களாகவே பாடப்பட்டவை. மண்டலங்களாக விரிபவை. எனவேத பதிக நான் மறை என்பது தமிழ் மறையைத் தான் குறிக்கும்.

**மறை நான்கும் தன் பாட்டென்பர்:- (பதிகம்)**
தமது பாடல்களாகிய ரிக் முதலாய வேதங்கள் இறைவனால் வழங்கப்பட்டவில்லை என்பது அவர் வாதம். எனவே இறைவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைநாலும் தம் பாட்டென்பது தமிழ் மறையே.
மிக்க வேத மெய்நூல்:-
மெய்ப் பொருளாகி இறைவனை உணர்த்தலால் தமிழ் வேதத்தையே குறிக்கும்.

**சுருதி மறை நான்கான செம்மை:-**

இது இறைவன் அருளியதால் மறை நான்கும் அவனே என்பதாகும். சுருதி என்பது செவியால் கேட்கப்படுவது. எனவே வட வேதம் இறைவனால் செல்லப்படாமையால், இது தமிழ் முனிவர்கள் கேட்க இறைவனால் செல்லப்பட்டதாகும்.

**இருக்கு நான்மறை:-**

இருக்கு என்பது மந்திரம் என்ற பொருள் உடைய தூய தமிழ்ச்சொல். "ரிக்" என்ற வடமொழிச் சொல்லிற்குத் தோத்திரம் என்று பொருள் என அவர்களே கூறுகிறார்கள். இந்த "ரிக்" என்ற வட சொல் ஒரிஇ தமிழில் எழுதப்படுவதற்கு தொல்காப்பியத்தில் கூறப்பட்ட விதிப்படி "ரிக்" என்ற வட சொல் "இருக்கு" வர வழி இல்லை. ரி என்ற எழுத்து முதலாகத் தமிழில் வர விதியில்லை. எனவே இதை முதலெழுத்தாக வரக்கூடிய அதன் இனமான எழுத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். ரிக் என்பது ருக்கு என்று சொல்லப்படும். ருக்கு என்பதற்கு இலக்கண விதிப்படி உருக்கு என்றுதான் வர வேண்டும். இதை உருக்குமணி உரூபா என்பதில் காண்க.

எனவே உருக்கு வேதம் என வந்தால் ரிக் வேதத்தைக் குறிக்கலாம். இருக்கு நான் மறை என்பதால் அது தமிழ் மந்திரத்தைக் குறிக்கும்.
"நிறைமொழி மாந்தர் ஆணையில் கிளர்ந்த மறை மொழிதானே மந்திரம் என்ப" எனத் தொல்காப்பியம் தமிழ் மந்திரத்தை உரைக்கின்றது.

**சந்தோக சாமம் ஓது வாயான்:-**

பரத்து வாச கோத்திரத்தைச் சேர்ந்த பிராமணர் ஆன நச்சிரனாக் கினியர், தொல்காப்பியம் சிறப்புப் பாயிரத்தில் நான்மறை முற்றி அறங்கோட்டாசான்.....என்று வரும் வரிக்கு உரை எழுதுகையில், அவை தற்போது உள்ள இருக்கு, யசுர், சாமம், அதர்வம் ஆகியவை அல்ல, வேறான தைத்திரீயம், தலவாகரம், பௌடிகம், சாமம் என்கிறார். ஆக இன்னொரு சாமம் உள்ளது. என்பதலால், வடவேத சாமம் இறைவனால் மொழியப்படாதலால், இராவணேஸ்வரன் ஓதிய சாமம், இசைவடிவான சாமம் ஓதும் வாயான் ஆகிய இறைவன் உதித்த தமிழ் சாமம் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தரர் கூறுகையில், "குறிகொள் பாடலின் இன்னிசை கேட்டு கோல வாளொடு நாளதும் கொடுத்து" என்பதால் உணர்க.

**மந்திரமும் தந்திரமும் தாமே:-**

மந்திரம் என்பது தமிழ் மந்திரத்தையும், தந்திரம் என்பது ஆகமங்களையும் குறிக்கும். உதாரணம்:-தொல்காப்பியத்தில் கூறப்பட்ட "நிறைமொழி மாந்தர்" என்பதாகும். சமஸ்கிருத மந்திரங்கள் அதை சொல்பவரை ஆழ்பவை ஆகின்றன. உதாரணமாக, நாரத முனிவர் செய்த வேள்வி மந்திரங்கள் தவறாக இருந்தமையினால் அங்கு அசுரனானவன் ஆட்டுக்கடாவாக உருவெடுத்தான். அப்போது முருகக்கடவுள் அதனை அடக்கியதாகப் புராணம் கூறுகின்றது. ஆனால் தமிழ்மந்திரத்தை அதை ஆள்கிறான். அது அவன் ஆணைப்படி செயற்படும் என்பதுதான் பொருள்.

"அண்டர் தமக்கு ஆகம நூல் மொழியும்" என்பதன் பொருள், ஆரியர்களிற்கு மொழிந்தான் என்றல்ல. அண்டர் என்போர், ஆகாய வெளியிலே உலாவரும் சித்தர்களிற்கு இறைவன் மொழிந்தான் என்பதாம்.

"அரவொலி ஆகமங்கள் அறிவார் அறி தோத்திரங்கள்
விரவிய வேதவொலி விண்ணெலாம் வந்து எதிர்த்திசைப்ப"

இது சுந்தரர் திருக்கைலாயம் செல்லும் பொழுது கண்டதால்கப் பாடிய பதிகவரிகளாகும். இது சிவபெருமானிற்கு உரிய தோத்திரமாகும். விரவிய வேதம் ஒலித்தது என்கிறார்.

வட வேதம் சிவனை விரும்பி ஏற்கவில்லை என்பதால் அது தமிழ் வேதமே!

மேலும் சான்றுகளாக,

> The Vedic Aryas Possed not Temples
> and used No images. The Diravidan
> Culture Promited image Worship and
> insisted Puja Place of Yajna
>
> Dr. S. Radha Krishnan.
> Religion and Society - P-111

(வேத ஆசிரியர்களிற்கு கோயில்களோ, உருவ வழிபாடுகளோ கிடையாது. மாறாக திராவிடப் பண்பாடு உருவ வழிபாட்டினைப் பரிந்துரைப்பதுடன், வேத வேள்விகளிற்குப் பதிலாகப் பூசையை வற்புறுத்துகின்றது. )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதத்தில் ருத்திரன் கூறப்பட வில்லையா எனச் சிலர் கேட்கலாம் வேத ருத்திரன் வேறு. தமிழர் இறைவனாக வணங்கிய சிவம் வேறு இதனையும் வேத வல்லுனரான டாக்டர் - இராதாகிருட்டினன் வாக்கிலேயே அவதானிப்போம்.

Rudra has a very sub - Ordinate Position in Rig. Veda being celebarated Onty in three entetierments . He Holds a thanclerbits in Hhis arms and discharges Lightning Schafts Ffrom the sky. (as against this) siva the berignaht with a whole tradition devolved round him.

Dr. S. Radha Krisnana
indian Philosophy vol. i. p. 81

எனவே ருத்திரன் ரிக் - வேதத்தில் மூன்றே மூன்று அத்தியாயத்தில் மிக கீழ் நிலையில் வைத்து பேசப்படுகின்றான். அதாவது ருத்திரன் கையில் இடி உள்ளவராகவும் வானில் இருந்து மின்னல்தனை வரவழைப்பவன் என்றும் கூறப்பட்டுள்ளது. ஆனால் தமிழர்கள் கண்ட சிவனோ மிகவும் கருணை வடிவானவன், என்று போற்றியவை தமிழ் வேதங்களே.

ஆகமங்கள் தமிழில் தான் முதலில் எழுந்தன- ஆதாரம் காரணாகமத்தில் ஒருவசனம் உள்ளது.

விந்யாத்ரே தட்சினே தேசே
சைவோற்பத்தி ப்பிரகீர்த்தித ஹ.
சிவேனே ஸ்தாபிதம் சைவம்
சைவேனே ஸ்தாபிதம் சிவம்.

இதன் பொருள்: விந்திய மலைக்கு தெற்கே உள்ள பிரதேசத்தில் சைவம் உற்பத்தியாகிப்புகழ் விரிந்ததாகவும், சிவாகமம் தமிழிலே ஆதியில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டதாகவும் அமைகிறது. ஆனால் இன்று மொழி பெயர்ப்பில் உள்ள ஆகமத்தில் அனைத்து மொழிகளிலும் இறைவனை ஆகம முறைப்படி பூசிக்கலாம். இது இன்றும் உள்ளது. எனவே இந்தச்சிவனே தான் தமிழிற்கு சங்கம் கண்டவன் என நக்கீரரே வரைந்த "இறைவனார் களவியல் உரையில்" இருந்து தெரிகிறது.

முவர்கட்கரியான் நிற்க
முத்தமிழ்த் தெய்வ சங்கப்
பாவலர் வீற்றிருக்கும்
பாண்டி நந்நாடு போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று நம்பியாண்டார் நம்பி திருவிளையாடல் புராணம் கூறுகிறது. அத்தோடு பலரும் எண்ணுவது போன்று ஆகமம் ஒரு சாராரின் சொத்தல்ல என்பதனை அந்த ஆகமமே பறை சாற்றுகிறது.
"சாதுர் வர்ணிகம் ஆதிகாரிகம் ஆகமம்"
என்பது,

ஆகமம் என்பது நான்கு வர்ணத்தார்க்கும் உரியது. (பொருள்)
மேலும் சான்று பகர்வதாக, இவர்கள் கூறுகின்ற "பிரதிட்டை" என்பதற்கு வேர்ச்சொல்லே தமிழ்ச் சொல்லாகும். பதிப்பது - பதிட்டை எனப்பட்டது. அதனை வடமொழியில் பிரதிட்டை என எடுத்தாண்டனர். வடமொழிவேத விற்பன்னர்களிடையே பிரதிட்டை என்பது அறியப்படாத ஒன்று. காரணம் அவர்கள் உருவ வழிபாட்டை அறியாதவர்கள் ஆதலால் பிரதிட்டை என்ற சொல் வேதங்களில் வர நியாயம் இல்லை. சிவாகம மந்திரங்கள் எல்லாம் தமிழில் இருந்து அப்படியே மொழிபெயர்க்கப் பட்டுள்ளன. எனவே அனைவரும் தமிழ் வழிபாட்டிற்குத் திரும்புவதே சாலப்பொருந்தும். ஆகம விதிப்படி அமைந்த கோவில்கள் தமிழகத்தோடு நின்று விட்டன. சம்பந்தர் கூற்றுப்படி, இன்றைய காளத்தி முன்னைய தமிழக எல்லை என்பதாலும் அதற்கு அப்பால் தமிழ் வழங்காததாலும் திரும்ப வந்ததாக பெரிய புராணம் கூறுகின்றது.

அங்கண் வடதிசை மேலும் குடக்கின் மேலும்
அருந்தமிழ் வழக்கு அங்கு நிகழாததாக.

பூசை என்பது தமிழ்ச் சொல்
பூசை என்ற சொல்லே தமிழ்ச்சொல் அதற்கு வடமொழிச் சொல்லில் வேர் ஏதும் (கிடையாது) காட்ட இயலாது. பூவினால் செய்யப்படுவது பூ செய் ஆகி அது பூசை என மருவியது. இதைப் பல அறிஞர்கள் உறுதி செய்துள்ளனர். அவர்களுள் டாக்டர். ராதா கிருட்னன் ஒருவர். எனவே தமிழர் கண்ட பூசையில் மந்திரங்கள் மட்டும் வேறுவிதமாக எப்படி இருக்கமுடியும்?
திருமந்திரத்தில் நாலாந்தந்திரத்தில் பாடல்கள் வலவரிில் திருவபேதச் சக்கரத்தில் (பீஜ) வித்து எழுத்துக்களாகக் கூறுவது தமிழ் மந்திரங்களே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேனி இரண்டும் விலங்காமல் மேல்கொள்ள
மேனி இரண்டும் இகார விகாரியா
மேனி இரண்டும் ஊ - ஆ - ஈ - ஏ - ஓ என்னும்
மேனி இரண்டும் ஈ - ஓ - ஊ - ஆ - ஏ கூத்தாமே.

மேலும்
இட்ட இதழ்களிடையந் திரத்திலே யட்ட ஹவ் விட்டதின் மேலே உவ்விடட்டுக்
கிட்ட இதழ்களின் மேலே கிரோம் சிரோம்
இட்டுவா மத்தாங் கிரோங்கென்று மேவிடே

இம் மந்திரங்களை சமஸ்கிருதம் என்று கூறப் பலர் முனையலாம். இது புவனாதிபதி சக்கரத்தைக் கூறிய நான்கு திருமந்திரப் பாடல்களில் ஒன்று. இதில் வரும் உ. கிரோம், சிரோம், ஆம், கிரோங் என்பன வடமொழி எழுத்துக்கள் அல்ல. சிரோம் என் கிரோம் வடமொழியில் எழுத்துக்கள் ஒன்றும் இல்லை. இது வித்தெழுத்தின் ஒலிக்குறிப்புகள், இதைத்தமிழிலே தான் மூலர் குறிப்பிட்டுள்ளார். இவற்றில் உ, ஆம் என்பன தமிழ் எழுத்துக்களே. இதில் வரும் ஹ என்பது ஆய்த எழுத்தின் ஒலிக்குறிப்பு, அஃது என்பதைப் உச்சரித்து பார்த்தால் புரியும்.

வட மொழியில் உயிர் மெய் ஏது? சமஸ்ருதத்தில் உயிர் பதினாறு, மெய் முப்பத்தைந்து என்றே கிடையாது. அதாவது உயிர் மெய் என்ற பாகுபாடே கிடையாது. என்பது மொழி அறிஞர்கள் அனைவரும் அறிந்த உண்மை.

அகராதி கழைகாராந்தம் அஷ்டவர்க்க; ப்ரகீர்த்திகா;
அஷ்ட வர்க்கம் த்வியந்து ஸ்கந்த பீஜம் இதப்பரம்.

என்பது வடமொழி தந்திரத்தால் வருவது. அங்கே பேசப்படுவது அஷ்டவர்க்கம் தானே ஒழிய உயிர் மெய் என்ற பாகுபாடு இல்லை. என்பதற்கு அச் சுலோகமே சான்று. அதில் முதல் வர்க்கம் ரு, லு என்பன எல்லாம் சேர்ந்து பதினாறாகவும் ஏனைய ஏழு வர்க்கத்தில் ஐந்தைந்து காட்டி முப்பத்தைந்து எழுத்துக்களாகவும் காட்டி உள்ளனர். க, ச, ட, த, ப என்ற தமிழ் மெய் எழுத்துக்கள் அப்படியே சமஸ்கிருதத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு, அதற்கு நான்கு வேறு ஒலிக் குறிப்புகளிற்கேற்ப நந்நான்கு வரிவடிவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்கப்பட்டுள்ளது. அதனால் மேற் கூறிய ஐந்து தமிழ் வல்லின எழுத்துக்கள் ஒலிமாறுபாட்டால் 20 எழுத்துக்களாக வகுக்கப்பட்டன. எனவே சமஸ்கிருதத்திற்கு வரி வடிவம் இல்லை. அனைத்தும் தமிழில் இருந்து கடன் வாங்கப்பட்டன.

ஆகவேதான் சமஸ்கிருதம் "எழுதாக்கிழவி" என உரைக்கப்படுகின்றது. அதன் எதிராக சம்பந்தர் பாடியதை, சேச்கிழார் எழுதுமறை என்றதனால் உணர்வோம். பழைய சிவாலயங்கள் தமிழ் நாட்டில் புதுப்பிக்கப்பட்ட போது, அதன் தகட்டில் தமிழ் வரி வடிவ எழுத்துக்கள் காணப்பட்டதும் இதற்குச் சான்றாகும்.

ஓம் - தமிழிலே

ஒவ்வொரு எழுத்திற்கும் அடிப்படை குறில் குறிலை நீட்டினால் ஓகாரம் வரும் உகரம் குறில் அதை நீட்ட ஊகாரம் வரும் ஒகரம் அதை நீட்டினால் ஓகாரம் வரும். (ஓ. கரம்)

அப்படியானால் ஒகரம் சமஸ்கிருதத்தில் இல்லையே இல்லாதபோது அதன் நீட்டமான ஓகாரம் எப்படி வரும்? எனவே ஓங்காரம் தமிழில் தான் உண்டு. ஓம் என்ற தமிழ்மறைத் தொடக்கம் தகர மெய்மேல் ஓகாரத்தை ஏற்றி "தோடுடைய செவியன்" என்ற எழுதுமறையை சம்பந்தர் தொடக்கியதாக சேக்கிழார் கூறுவார். மேலும் மந்திரங்களால் அன்றி ஒரு அற்புதமும் வடமொழியால் நடந்ததாக மருந்துக்கும் நான் அறியேன் என்கிறார் வள்ளல் பெருமான்.

> இலைக்குளநீர் அழைத்ததனில் இடங்கர் உற அழைத்த தன்வாய்
> தலைக்குத்தலை மதலை உயிர்தழைப்பவழைத் தருளிய நின்
> கலைக்கும் வடகலைக்கும் முதற் கலைக்கும்முறு கணக்குயர்
> பொன்மலைக்கும் அணு நிலைக்குமுறா வன் றொண்டர் பெருந்தகையே.

கண்ட பெருமந்திரமே மூவர் பாடல் என முழங்கியவர் உமாபதி சிவாச்சாரியார். பிறப்பால் பிராமணரான இவர் தமிழால் இறைவன் பணிக்க கொடிக்கவி பாடியே தில்லையில் கொடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறியது. மருந்து வேண்டில் இவை மந்திரங்கள் என்றார் சம்பந்தப் பெருமான். "வாயிருந்த தமிழிலே படித்து ஆளுநா ஆயிரம் சமணரும் அழிவாக்கினார்" என்பது அப்பர் வாக்கு. "வாயிருந்த தமிழ்" என்பது மந்திரத்தமிழ் எனப்படும். வாய்க்கச் செய்வதால் வாய்மொழி என்று மந்திரம் கூறப்பட்டது. இரும்தமிழ் என்பதில் "இரும்" என்ற சொல் மிகப் பெரியது எனப் பொருள் தரும். இருநிலம் என்றால் பெரிய நிலம் எனக்காண்க. எனவே இம்மந்திரம் என்பது அனைத்திலும் பெரியது என்று பொருள்.

வேதங்களும் சமஸ்கிருதத்தில் எழுதப்படவில்லை. அவை சந்தஸ் எனும் மொழியில் எழுதப்பட்டன என்பதை காஞ்சிப் பெரியவரே தமது உரையில் கூறியுள்ளார்.

அடுத்து அர்ச்சனை என்பது, வடமொழி வேதம் எதிலும் சிவார்ச்சனை என்பது குறிப்படப்படவில்லை. இதை வேதவிற்பன்னர்களே உறுதிப்படுத்தியுள்ளனர். இப்பொழுது கோயில்களில் உள்ள வடமொழி நாமாவளி கோயில் கிரியை பற்றி ஆகமத்திலும் இல்லை. காரணாகமத்தில் நித்தியார்ச்சனை விதிப்படலம் என்ற ஒன்று உண்டு. அதில் அர்ச்சனை நாமாவளிகள் குறிப்பிடப்படவில்லை. சிவனுக்குரிய துதிப் பாடல்களே கூறப்படுகின்றன. அதைத்தான் சுந்தரர்க்கு இறைவன் கூறினார் - அரச்சனைப் பாட்டேயாகும் சொற்றமிழால் பாடுக என்று. எனவே அர்ச்சனையை இறைவன் தமிழில் தான் விரும்பிக்கேட்டான். மேலும் அர்ச்சனை பாட்டேயாகும் என்று இறைவன் கூறியதால் பதிகங்கள் அர்ச்சனைக்கு உரியவையே.

சைவ சிவத்தாந்த ஆசிரியர்களில் "உமாபதிசிவம்" மிக முக்கியமானவர். பௌஷ்கராகமத்திற்கு வடமொழியில் வியாக்கியானம் எழுதிய அவரே - கண்ட பெருமந்திரமே மூவர்பாடல். கைகாணாத மந்திரம் கண்ணுதலோர் கூறல், ஆக எவரேனும் நாயன்மார் வருகைக்கு முன் தமிழில் வழிபாடு நடந்ததா எனில், ஆம் என்று சம்பந்தர் பாடல்கள் பொருள் பகரும். ஏன் எனில் சமஸ்கிருதம் தோன்றுமுன் வடவேதங்கள் "சந்தஸ்" எனும் மொழியில் தான் இருந்தது. சிவாலயங்கள் தமிழ்நாட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமஸ்கிருதம் ஆரியரோடு நுழைய முன் அங்கு தமிழே கருவறையை அலங்கரித்தது சான்று. ஊறும் இன்தமிழால் உயர்ந்தார் தொழு தேத்தும் தில்லை - என்பதும் செந்தமிழர் தெய்வமறை நாவர் செழுநற்கலை தெளிந்த அவரோடு அந்தமில் குணத்தவர்கள் அர்ச்சனைகள் செய்கின்ற அரனூர் என்பது சம்பந்தர் வாக்கால் மறுக்க வொண்ணா சான்றுகள். மறை எனும் பொருள் பட மந்திரங்கள் தமிழில் தான் உள்ளது. ஏன் எனில் சமஸ்கிருத மந்திரங்கள் வேண்டியதை முன்னிறுத்திச் செல்லும். ஆனால் சம்பந்தர் 'மட்டிட்ட' புன்னை எனத் தொடங்கும் பதிகம்பாடி பானையில் இருந்த பூம்பாவையை உயிர் பெற வைக்கின்றார். ஆனால் அவர் எலும்பேஎழுக தாதுக்களே சேர்க பானை உடைக என்றெல்லாம் கூறவில்லை. பதிகத்தில் அவை மறை பொருளாக வைக்கப்பட்டு அதன் ஆற்றலால் நடந்தது. எனவே மறை எனும் மந்திரம் தமிழே. தமிழ் மந்திர நூல் உண்டா? அல்லது அதில் வல்லோர்கள் உள்ளார்களா? என்று வினவுவோமே ஆனால், ஆம் தொல்காப்பியத்தில் தமிழ் மந்திரச் செய்யுளே உண்டு எனலாம்.

"பாட்டுரை நூலே பிசியே வாய்மொழி
அங்கதம் முதுசொலோடு அவ்வேர் நிலத்தும்
வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்
நாற்பேர் எல்லை அகத்தவர் வழங்கு
யாப்பின் வழியது என்மனார் புலவர்"

என்பது தொல்காப்பியர் நூற்பா. இதில் செய்யுள் வகை என்னென்ன என்று விளக்கப்படுகிறது. செய்யுள்கள், பாட்டுச் செய்யுள், உரைச்செய்யுள், பிசிசெய்யுள், அங்கத செய்யுள், முதுமொழிச் செய்யுள், நூற்செய்யுள், மந்திரச் செய்யுள், என எழுவகைப்படும் என உரைகாரர்கள் விரித்துரைத்தனர். இதிலே வாய்மொழிச்செய்யுள், மந்திரச் செய்யுள் என உரைக்கப் பட்டதைக் காணலாம். தொல்காப்பியம் பல்லாயிரம் ஆண்டுகள் முற்பட்டது என்பதும் மந்திரம் அதன் மூலம் தமிழேயாகும்.

இன்று தமிழ் நாட்டு ஆதீனங்களில் முக்கியமானவை, தருமபுர ஆதீனம் மற்றும் திருவாவடுதுறை ஆதீனம் ஆகும். தருமபுரத்து குருமுதல் குருஞானசம்பந்தர். அவர் எட்டு ஞானஉபதேச நூல்களைத் தந்தவர் அவற்றில் ஒன்று கூட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமொழியில் இல்லை. திருவாவடுதுறைக் குருபரம்பரை உமாபதிசிவத்தில் தொடங்கி இருந்திருக்கின்றது. உமாபதி சிவாச்சாரியார் சித்தாந்த நூல்களை தமிழிலேயே வழங்கி உள்ளார். பிறப்பால் பிராமணர் என்றாலும் தமிழே தெய்வ மொழி என்றுணர்ந்த பெரியார்.

எம்தாய் மொழி தமிழ் மந்திர வடிவானது. தெய்வ மொழி எனும் பண்புகள் நிறைந்ததும் எனத் தமிழைப் போற்றுவோரும் கருவறையில் தமிழ் ஒலிக்கத் தயங்குவதே அறியாமையின் உச்ச நிலையாகும். சம்பந்தர் காலத்திலும் ஆலயங்களில் தமிழ் வழிபாடே நிலைத்தது என்பதை முன்பு அறிந்தோம். இங்கே தெய்வத் தமிழிற்கு அவர் கொடுத்த சிறப்பினைக் காண்போம்.

ஆரா அருந்தமிழ், இசை மலிதமிழ், இன்புறு தமிழ், இன்றமிழ், உருவாகும் ஒண்டமிழ், உரையார் தமிழ், ஏரிணார் தமிழ், ஒளிர்பூந்தமிழ், கலைமலித்தமிழ், பண்ணருந் தமிழ், பரவார் தமிழ், பலமிகு தமிழ், பாரினார் தமிழ், புகழ் நின்ற தமிழ், பேரியல் இன் தமிழ், மறையிலங்கு தமிழ், முத்தமிழ் என்றெல்லாம் போற்றியுள்ளார். எனவே இது புதிய எழுச்சி அன்று. மீள் எழுச்சியே ஆகும்.

மற்றும் முன்னைய ஆலயங்களில் தமிழில் வழிபாடு இருக்கவில்லை என்போர் சற்று சிந்திக்க வேண்டும். கி.மு. 3500 களிலேயே சிந்து வெளித்தமிழர்கள் சிவாலயம் கட்டித் தமிழிலேயே சிவவழிபாடு செய்துள்ளார்கள். ஆனால் சமஸ்கிருதம் உருவாகியதோ கி.மு. 500 என்று மொழிஅறிஞர்கள் சான்று காட்டி நிறுவி உள்ளனர். ஆனால் கி.மு 10,000 ஆண்டிலேயே பஃறுளியாற்றின் கரையில், ஆட்சி புரிந்த பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி" தூயதமிழால் வேள்வி ஆற்றியுள்ளான் என்பதைப் புறநானூறு கூறுகின்றது. சமஸ்கிருதம் வந்த பின் ஆலயங்கள் தோன்றவில்லை. தமிழ் நாட்டு ஆலயங்களில் சமஸ்கிருதம் கி.பி. 7ஆம் நூற்றாண்டில் பல்லவர்களால் உள் நுழைந்து கி.பி. 14ஆம் நூற்றாண்டில் கிருஸ்ணதேவராயரால் முழுமையாகத் திணிக்கப் பட்டது. மற்றும் தமிழ் மந்திரமாம் 3000 திருமந்திரத்தில் முக்தியை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானத்தை, முத்தமிழ் ஓசையை என்பதன் ஊடாக முக்தியும், முத்தமிழ் ஓசையும் இறைவனும் ஒன்றே என்கின்றார் மூலர்.

எனவே சொற்கோவும் தோணி புரத்தோன்றலும் சுந்தரரும் சிற்கோல வாதவூர் தேசிகரும் முற்கோலி விந்திரல் நீறெங்கே? மாமறை நூல் தானெங்கே? எந்தைபிரான் ஐந்தெழுத்தெங்கே? என்னும் பழம்பாடல், இன்று நாம் ஆலயத்தில் தமிழைத் தவிர்த்தால் துரோகம் ஆகும். எனவே இன்தமிழால் இறைவனை வழிபடுவதே இன்பம். தமிழில் இருந்து மொழி பெயர்க்கப்பட்ட ஆகமம் கூறும் வசனம்: -

"சிவேனே ஸ்தாபிதம் சைவம்
சைவேனே ஸ்தாபிதம் சிவம்"

ஆக, சிவன் தான் சைவத்தை நிறுவினான் என்று கூறுகிறது. இந்தச் சிவன் தான் முதல் தமிழனாக சங்கம் நிறுவிய புலவர்களோடு இருந்து தமிழ் ஆய்ந்தான் என்று இறையனார் களவியல் உரை, திருவிளையாடற்புராணம், கல்லாடம் என்ற நூல்கள் கூறுகின்றன. அத்தோடு மணிவாசகரும் அப்பரும் தமிழ்ச்சங்கம் அமைத்து தமிழாய்ந்தவன் என்று பாடியுள்ளனர். இன்னும் சொன்னால் (சிவ பெருமானே) மணிவாசகர் பாடிய" சிறைவான் புனல்" எனத்தொடங்கிய பாடலில் தமிழ்ச்சங்கத்தில் தமிழ்த்துறைவாய் நுழைந்தனையோ என்று பாட, அதை இறைவனே எழுதிக் கொண்டது மிகப்பெரும் சான்று.

இக்கூற்று தவறானால், நான் தமிழ் ஆய்ந்தேனா? சங்கம் கண்டேனா? என இறைவனே கண்டனம் தெரிவித்திருப்பான். எனவே சைவர்களாகிய நாம் எம் இறைவனை வழிபட உகந்தது எம்தாய்மொழியே யாம். சைவமும் வழிபாடும் தமிழில் வழிபடுவதே முறையாகும்.

"சாதுர் வர்ணிகம் ஆகமம் ஆதிகாரிகம்" என்பது ஆகம வசனம். இதன் பொருள்: ஆகமத்திற்கு நான்கு வர்ணத்தாரும் அதிகாரிகள் என முழங்குகிறது. நாவுக்கரசர், சிவவழிபாடு செய்யும் புலையரையே தாம் வணங்கும் கடவுள் என்கிறார். எனவே தமிழர் மத்தியில் சாதீயம் வலிந்து திணிக்கப்பட்ட ஒரு மடமைத்தனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதைச் சிந்தையால் தெளிவோம் எல்லோரும் இறைவனின் பிள்ளைகள் என்றால் மனிதனுள் மனிதம் வேற்றுமை காணல் தகுமா? எனவே இதுவரை ஆகமம் தமிழர்சொத்து என்பதையும் சாதியம் தமிழர்களிற்குரியது அல்ல என்பதையும் எமது இறைவனைத் தாய் மொழியால் வழிபடலாம் என்பதையும் பார்த்தோம். இப்போ தமிழர் தம்மொழி, சமயம், நிலவியல் பற்றி சற்று ஆராய்ந்து அறிந்து கொள்வோம்.

**இலெமூரியாக் கண்டம்:-**

உலகம் இன்று நாம் காணும் நிலையில் உருவாகவில்லை. சுமார் 460 கோடி ஆண்டுகளிற்கு முன் கதிரவனில் இருந்து வெடித்து வெளிவந்த ஒரு கற்கோளம் என்று விஞ்ஞானம் விளம்புகிறது.

ஒரு குறிப்பிட்ட காலத்தில் இன்றுள்ள எல்லாக் கண்டங் களும் ஒன்றாக இருந்தன. இதனைக் "கோண்டு வானா" என்று நிலநூல் வல்லார்கூறுவர். நிலத்தின் அடியில் ஒரு சலனம் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். இச்சலனத்தால் நிலத்தகடுகள் நகர்ந்து கொண்டே இருக்கின்றன. பெரியசலனம் ஏற்படும் பொழுது பெரும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. "வேண்டுவானா" என்பது ஒருகாலத்தில் இரண்டாகப் பிரிந்தது. பிரிந்த ஒன்றில் நில நடுக்கோட்டை இணைத்து இன்றைய ஆபிரிக்கா, இந்தியா, மலேசியா, இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ் ஆஸ்திரேலியா ஆகியவை இணைந்து தென்துருவம் வரை ஒரு நிலப்பகுதி இருந்திருக்கின்றது. இதற்கு இலெமூரியா என்று கடலாய்வு வல்லுநர்களும் நிலநூல் வல்லுநர்களும் பெயரிட்டிருக்கின்றனர். நில ஆய்வு வல்லுநர்களின் கூற்றுப்படி இவை மூரியாக்கண்டம் கிழக்கு 20 $^{0}$ முதல் மேற்கு 80 $^{0}$ பாகை வரை பரவிக்கிடந்திருக் கின்றது. முழுச்சுற்றளவாகிய 360 $^{0}$ பாகையில் 260 $^{0}$ பாகை இலெமூரியாவின் நீளமாகும். இவ்வாறு குமரிக்கண்டம் என்ற நூலில், கா. அப்பாத்துரையின் கூற்றுப்படி இலெமூரியாவின் தென்பகுதியே குமரிக்கண்டமாகும்.

எனவே நிலநடுக்கோட்டில் உள்ள இலெமூரியா கண்டத் திலே முதல் முதலில் மனிதன் தோன்றினான் என்றும் அதிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் குமரிக் கண்டத்தில் தான் முதலிலே தோன்றினான் என்றும் மானுடவியல் ஆய்வாளர்களும் கடலாய்வு நிபுணர்களும் கூறி உள்ளனர். இப் பெரும் (இருகண்டங்களும்) கண்டமும் இரண்டாகப் பிரிந்து இரு கண்டங்கள் ஆயின என்று நிலநூல் அறிஞர் "ஆல்பிரட் வாலஸ்" என்பவர் கூறுகின்றார். இதுவே குமரிக்கண்டம் உருவான வரலாறாக இருக்கலாம். இங்கே தான் மனிதன் முதல் முதல் தோன்றினான் என்று உலக மானுடவியல் அறிஞர்கள் ஒருமித்த கருத்து. கொண்டுள்ளனர். குறிப்பாக "முக்கடல் புதிர்" என்ற தலைப்பில் (The Riddles of Three Oceans) ஆய்வு நூல் வழங்கிய (புரோக்ராய் பதிப்பக்த்தார் மாஸ்கோ 1974) நூலாசிரியரான அலெக்சாண்டர் கோந்த்ரதேவ் இவ்வாறு குறிப்பிடுவது கருத்தில் கொள்ளத்தக்கது.

இவ் ஆய்வின் மிகப்பெரிய வியப்பு எதுவெனில் மனிதப் பண்பாட்டின் முதல் தோற்றம் இந்துமாகடலில், மிக விரிந்த நிலப்பரப்பில் நிகழ்ந்துள்ளமை ஆகும். இந்நிலப்பரப்பில், மனிதக் குரங்குகள் அல்ல முழுநாகரீகம் அடைந்த மனிதர்களே வாழ்ந்திருக் கின்றார்கள் என்பதே மறுக்க முடியாத உண்மையாகும். இவ்வாறு கூறிய அவர் அம்மனிதர்களின் மொழி திராவிடமொழிக்கும், பழைய சுமேரிய மொழிக்கும், பழைய உபைதா மொழிக்கும் தொடர்புடையதாக இருந்திருக்கிறது என்றும் ஆய்ந்து உரைத்துள் ளார்.

ஆக, உலகில் குமரிக்கண்டத்தில் தோன்றியமுதல் மனிதன் தமிழனே என்றும் உலகப் பண்பாட்டின் தொட்டிலாகத் தமிழ்ப் பண்பாடே இருந்தது என்பதை விஞ்ஞானிகளும் ஆய்ந்து நாட்டுவது பெருமையே.

விஞ்ஞானம் கூறியது இருக்க பண்டைத்தமிழ் இலக்கியங் களில் அவை உள்ளதா என உறுதி செய்தல் வேண்டும். கி.பி. முதல் நூற்றாண்டில் தோன்றியதாகக் கருதப்படும் "இறையனார் களவியல்" என்ற நூலிற்கு அக்காலத்து நக்கீரர் எழுதிய உரையில் குமரிக்கண்டம் பற்றிய குறிப்பு வருகிறது. அது தற்போதைய குமரிமுனையில் இருந்து 750 காவதம் அதாவது 750x10 7500 மைல் தூரம் தெற்கே பரவி இருந்ததாகவும் அவையெல்லாம் மூன்று பெரும் கடல் கோள்களால் மெல்ல மெல்ல கடலுள் மூழ்கி விட்டதாகவும் அவற்றின் பெயர்களும் கிடைக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

|  |  |  |  |
|---|---|---|---|
| 1. | குமரி நாடு | 2. | ஏழ்குறும்பனைநாடு |
| 3. | ஏழ் முன்பாலை நாடு | 4. | ஏழ் பின்பாலைநாடு |
| 5. | ஏழ்குணகரைநாடு | 6. | ஏழ் மதுரை நாடு |
| 7. | ஏழ் குன்றநாடு | 8. | ஏழ் தெங்க நாடு |
| 9. | கொல்லம் நாடு | 10. | தென் பாலிநாடு. |

இவற்றையெல்லாம் சிலப்பதிகார உரை ஆசிரியர் அடியார்க்கு நல்லாரும் தனது உரையில் உறுதிசெய்கின்றார். எனவே பண்டைத்தமிழ் இலக்கியங்களும் விஞ்ஞானிகளும் இணைந்து இலெமூரியாக்கண்டத்தையும், குமரிக்கண்டத்தையும் ஒருவர்க்கொருவர் உறுதி செய்கின்றனர்.

**இதே போன்று சிந்து வெளி நாகரீகம்:-**

தமிழர்களோடு தொடர்புடையது இதைவெளிப் படுத்தி ஆய்வறிக்கை வெளியிட்டவர் "சேர். ஜோன். மார்சல்" என்னும் தொல்லியல் அகழ்வாய்வு நிபுணர் ஆவர். 1921-22 ஆம் ஆண்டுகாலத்தில் பாகிஸ்தானும் இந்தியாவும் ஒன்றாக இருந்தவேளை அப்போதைய ஆங்கில அரசின் ரெயில்வே துறை இலாகூருக்கும் இராவல் பிண்டிக்கும் இடையே பாதை அமைக்க அகழ்ந்தபோது சுட்டகளிமண் ஓடுகளும் மேலும் பற்பல பழைய காலப் பொருட்களும் கிடைத்தன. இவையாவும் ஜோன். மார்சல் எனும் தொல்லியல் அகழ்வாராய்ச்சியாளர் கொண்டு வரப்பட்டன. அவர் அரச அனுமதியுடன் தொடர்ந்த ஆய்வில் சிந்துநதி சமவெளியின் பகுதிகள் மொகஞ்சதாரோ, ஹரப்பா என்பன கண்டறியப்பட்டது. இவற்றில் கிடைத்த தகவல்கள் உலகையே புரட்டிப் போட்டது. 1925 ஆம் ஆண்டு இது பற்றிய தகவல் வெளியிடப்பட்ட போது உலக வரலாற்று ஆசிரியர்களிற்கு இன்ப அதிர்ச்சி ஏற்பட்டது. மிக உயர்ந்த பண்பாட்டினை உடைய தமிழினம் வாழ்ந்த இடம் இலெமூரியாவின் ஒருபகுதியான குமரிக்கண்டமாகும். ஏனெனில் மேலைநாட்டு வரலாற்று ஆசிரியர்கள் " மொசப்பத்தோமியா" பகுதியில் வாழ்ந்த சுமேரியர்களே மிக முன்னேற்றமான நாகரீக இனம் என்று கருதிய வேளை அவர்களிற்கும் முன்னதாக சிந்துவெளியில் மிக மிக முன்னேறிய மனித குலம் வாழ்ந்திருக்கிறது என்று சான்றுகள் கிடைத்த உடன் அதிர்ந்து போனதும் உண்மைச் சம்பவங்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தோடு சுமேரியர்கள் பயன்படுத்திய பானைஓடுகளைப் போன்றே சிந்து வெளியிலும் கிடைத்ததால் சிந்துவெளித் தமிழர்களே சென்று மொசப்பத்தோமியாவில் தங்கினர் என்பது சான்று. குறிப்பாக இந்தியாவின் தொன்மைக்குழுவினர் ஆரியரே என்றும் வேதகாலம் என்பது இந்தியாவின் புகழ் மிக்க காலம் என்றும் கூறப்படுகிறது.

மேலும் நெல்லை மாவட்டம் (தமிழ்நாடு) ஆதி நல்லூரில் கிடைத்த முதுமக்கள் தாழிகளும் பானை ஓடுகளும் சிந்துவெளியில் கிடைத்த சான்றுகளுடன் ஒத்ததாகவே உள்ளது. எனவே இந்தியாவின் தென்கோடியில் (ஈழம்வரை)கிடைத்த ஆசியா மொசப்பதோமியாவில் கிடைத்த எழுத்துக்களும் ஒன்றாகவே உள்ள காரணத்தால், பழைய காலத்திலேயே கடல் கோள்களினால் ஒருபகுதியினர் தெற்கிலும் வடக்கிலும் மத்திய ஆசியாவிலும் நிலைத்தனர். எனலாம். மற்றும் பல பொருட்களில் கோழிக் கொடி பொறிக்கப்பட்டமையினால் பழைய தமிழர் வழிபாட்டில் முருகப் பெருமானும் சிறப்பிடம் வகித்திருக்கின்றார். மற்றும் அவர்களின் மண்டை ஓட்டில் நெற்றியின் புருவ மத்தியில் கண் அளவு குளிகள் இருந்ததாக **19.11.2005** தினத்தந்தி நாளேட்டில் உலகப்பாரம்பரிய வாரவிழாவில் இத்தகவலை அகழ்வாராய்ச்சியாளர்கள் உறுதி செய்துள்ளனர். எனவே புருவ மத்தி நுட்ப அறிவின் வெளிப்பாடாகவும், முக்காலமும் உணரக்கூடிய உன்னத இனமாகவும் இருந்துள்ளமை தெரிய வருகிறது. இவ்வாறான உன்னத இனம் தம்தாய் மொழியாலேயே அறிவைப் பெற்றிருப் பார்கள் என்பது திண்ணம். ஆக " கார்வே" என்ற குமரிக்கண்ட ஆய்வாளர் கூறுகையில் நீண்ட நாட்களிற்கு முன் பழந்தமிழர் தொலைவில் உணர்தல் என்னும் அறிவான மூன்றாம் கண்ணைப் பெற்றிருந்தனர் என்கிறார்.

இதுவரை உலகின் ஆதி இனம் தமிழினம் என அறிந்தோம். இதற்கு மேலும் வலுச்சேர்ப்பதான சங்ககாலம் பற்றிப் பார்ப்போம். ஒருமொழியை ஆய்வு செய்ய சங்கம் கண்டதென்றால் அது தமிழ் மொழியேயாகும். அதிலும் அச்சங்கத்தை நிறுவியவனே சிவன் ஆவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கண்ணுதற் பெரும் கடவுளும் கழகமொடு அமர்ந்துப்
பண்ணுறத் தெரிந்து ஆய்ந்த இப்பசுந்தமிழ் ஏனை
மண்ணிடைப் பல இலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணிடைப் படக் கிடந்ததாய் எண்ணவும் படுமே"

என்று பரஞ்சோதி முனிவர் பாடும் திருவிளையாடற் புராணம் கூறும். அதில் தமிழ் புலவர்கள் இருக்க இறைவன் நின்று கொண்டிருந்தானாம்.

"மூவர்கட்காரியான் நிற்ப முத்தமிழ்தெய்வச் சங்கப் பாவலர்
வீற்றிருக்கும் பாண்டி நன்நாடுமாதோ"

இறையனார் களவியல் உரையில் நக்கீரர் கூறுகையில் முப்புரம் எரித்த விரிசடைக் கடவுளும் குன்றம் எறிந்த குமர வேளும், நிறுவிய தலைச்சங்கம் என்கிறார் படைப்புக் காலத்தில் இறைவனால் சதாசிவர்களிற்கு கற்பிக்கப்பட்ட மொழி தமிழ் என்று ஓதாது உணர்ந்த வள்ளல் பெருமான் இராமலிங்க அடிகள் கூறியுள்ளார். எனவே இறைவனே சங்கமும் நிறுவி பாண்டிய மன்னனாக, சுந்தர பாண்டியனாக ஆண்டும் தமிழை வாழ வைத்தான். ஆராத்தமிழ் காதலனின் திருச்செவி குளிரும் வண்ணம் ஆலயங்களில் செந்தமிழ் வழிபாடே சாலச் சிறந்தது என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகும்.

வடமொழி வேள்வி என்பது, கி.மு. 1500 ற்குப் பிற்பட்டு ஆரியர் இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் ஆப்கானிஸ்தானின் காபூல் வழிவந்த ஆரியர் தொடர்புடையது. எனவே தமிழ் வேள்வி பல்லாயிரம் ஆண்டுகளிற்கு முன்பே நடந்தேகிஉள்ளது. இதனை உறுதிப்படுத்துவதாக புறநானூற்றுப் பாடல்கள் அமைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

" நற்பனுவல் நால் வேதத்து
அருஞ்சீர்திப் பெருங்கண்ணுறை
நெய்ம்மல் ஆவுதி பொங்கப் பன்மாண்
வீயாச் சிறப்பின் வேள்விமுற்றி
யூபம் நட்ட வியன்களம் பலகொல்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் பாடல் ஆவுதி பொங்கப்பட்டது என்பது யாகத்தின் நினைவாக தூண் ஒன்றை நாட்டினான் என்பதும் புலனாகிறது. "ஆவுதி" என்பது தூய தமிழ்ச்சொல்லாகும். ஆவதைச் செய்வது ஆகுதி, எனவே வேள்வி, யாகத்திற்கு தமிழே மூலம் என்பது திண்ணம். மேலே கூறப்பட்ட பாடலில் "நால்வேதத்து" என்பது அறம் பொருள் இன்பம் வீடு என்பதைக் குறிக்கும். வெகு காலமாக வடவேதங்கள் மூன்று என்றே கூறப்பட்டு வந்தன. நீண்ட காலங்களின் பின்பே அதர்வணவேதம் சேர்க்கப்பட்டது என்பது கற்றோர் கண்ட உண்மை. "வேதம்த்ரயே" என்று வடமொழி நிகண்டான அமரகோசம் கூறுகிறது. எனவே கி.மு. 18000 இலேயே ஒரு பாண்டிய மன்னன் முற்று முழுதாக தமிழ் வேள்வியே ஆற்றியுள்ளான் என்பதும் வலுவாக உறுதியாகின்றது. அது மட்டுமன்றி அவன் பெயர் "பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி" என்பதால் செய்யப்பட்ட யாகங்களின் சிறப்புப் புலனாகிறது. அக்காலத்திலேயே சிவாலயங்கள் பல இருந்திருக்கின்றன. அங்கு தமிழே கோலோச்சியது என்பதும் கீழ்க்காணும் பாடல்களால் புலனாகும்.

பணியியர் அத்தைநின் குடையே முனிவர்
முக்கட் செல்வர் நகர்வலம் செயற்கே

என்பதால் பாண்டியனின் குடை சிவன் கோவில் வாசலில் தாழ்த்தி பணியட்டும் எனப்பொருள்படும். வடவேத வேள்வியில் மிருகங்கள் பலியிடப்பட்டன. தமிழ் வேள்வியில் பொங்கல் ஆவுதியாக்கப்பட்டதாக முன்னேயே கூறி உள்ளோம்.

முதல் சங்கம் கி.மு. 18000 இயங்கியகாலம், புலவர்கள்,

| சங்கம் | இயங்கிய ஆண்டு | பாடியபுலவர்கள் | உறுப்பினர்கள் |
|---|---|---|---|
| தலைச்சங்கம் | 4440 | 4449 | 549 |
| இடைச்சங்கம் | 3700 | 3700 | 59 |
| கடைச்சங்கம் | 1850 | 449 | 49 |

இயங்கிய இடம் முறையே!
தென்மதுரை (குமரிக்கண்டம்)

கபாடபுரம் (குமரிக்கண்டம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போதய மதுரை (மதுரை)

இடைச் சங்கம் 6085 என்று அறிஞர்கள் கூறுகின்றனர். அதன் தலைவனாக "அகத்தியர்" இருந்திருக்கின்றார். அதில் தமிழ் இலக்கணம் தந்த "தொல்காப்பியர்" குறிப்பிடத்தக்கவர் அவர் பின் கடைச்சங்க கால தலைவராக "நக்கீரர்" இருந்துள்ளார்.

இனிச் சங்க இலக்கியங்களில் சிவன், முருகன், திருமால், கொற்றவை (அம்பாள்) போன்ற தெய்வங்களிற்கு வழிபாடு நடந்ததா என்றால் ஆம் அதற்கான சான்றுகள் கொட்டிக் கிடக்கின்றன. புறநானூற்றில் முதல்பாடல்.

கண்ணிகள் நறுங்கொன்றை காமர்
வண்ண மார்பின் தாருங்கொன்றை
ஊர்தி வார் வெள் ஏறி சிறந்த எனத்தொடரும் பாடல்
சிவனையும் கூறுவதோடு.

கலிகெழு கடவுள் கந்தம் கைவிடப்
பலி கண் மாறிய பாழ்படுபொதியில்

என்னும் சங்கப்பாடல் கடவுள் கந்தம் என்பது நடுதறி எனப்படும் சிவலிங்கத்தைக் குறிக்கும். பொதியில் என்பது சிவன் கோவிலைக் குறிக்கும். பலியிட்டால் சிவலிங்க ஆற்றல் மறைந்து கோயில் பாழ்படும் என்கிறது அவ்வரி. எனவே அன்புவழி சைவமாகிய சிவலிங்க வழிபாடே ஆதிவழிபாடு என்பதால் கொல்லாமை நெறியின் தாய் இனம் தமிழர் இனமே.

சிவவழிபாட்டோடு முருகன் திருமால் அம்மன் வழிபாட்டி லும் ஈடுபட்டது. பல பாடல்களில் நிறுவப்பட்டுள்ளன. காக்கும் கடவுளான திருமாலை பிற வழிபாட்டினர்க்கு வழங்கியவர்களே தமிழர்கள் தான். எனவே தேவர்களை வழிபட்டவர்களிற்கு திருமாலை வழிபடு தெய்வமாக வழங்கிய நாம் முதல்வனான சிவபெருமானை சிக்கெனப்பிடித்தனர். இதை உணர்ந்த ஆசிரியர்கள் இறைவனை "மகாதேவர்" என வியந்தனர். எனவே 17.09.2012 பேர்ண் அருள்ஞானமிகு ஞானாம்பிகையுடன் உறை ஞானலிங்கப்பெருமான் திருக்கோவிலில் நடந்தேறிய உலக சைவ மகா நாட்டில், சிவாகம வித்தகர் செந்தமிழ் வழிபாட்டு போராளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மு.பே. சத்தியவேல் முருகனார் பங்கேற்ற நிகழ்வில் இங்கிலாந்தில் இருந்து வருகை தந்த இழத்தமிழர் சிந்தாந்த கவிமணி பெற்றோலிய அகழ்வாராய்ச்சி நிபுணர் இராஜமனோகரன் ஐயா அவர்களும் உலகத்தமிழர் ஆலயங்களில் கருவறைவரை இனித் தமிழே ஒலிக்க வேண்டும் என்று முழங்கிய துடன் சிவனைக் கருவறையில் நடுநாயகமாக தமிழன் வழிபட்ட காலம் மன்னர்களாக கோலோச்சினான். என்று சிவம் பரிவார மூர்த்தி ஆக்கப்பட்டதோ அன்றே தன் அழிவையும் தேடிக் கொண்டான். என்பது சிந்தனைக்குரியது. ஆனாலும் தமிழ் மன்னனான "இராஜ இராஜ சோழன்" கடாரம் என்று சொல்லப்படுகின்ற மலேசியா, இந்தோனேசியா, பர்மா, தாய்லாந்து, பாலி போன்ற நாடுவரை விரிந்திருந்தும் தமிழ் மன்னர்கள் தமக்குள் தாமே அதிகாரப் போட்டி நடத்தினர். தமிழ் வழிபடுமொழியாக இருந்து நலிவடைந்து இன்று தமிழர்களே தம் மொழி வழிபடுமொழி அல்ல, அதில் மந்திரம் இல்லை ஒலி இல்லை, ஏன் இவர்கள் கால காலமாக இருந்து வரும் சமஸ்கிருத வழிபாட்டைப் புறக்கணிக்கிறார்கள் என்று கேள்விமேல் கேள்வி கேட்கும் இழிநிலை எப்படி வந்தது என்று பார்ப்போம்.

**விஜயநகரப் பேரரசின் தமிழக ஊடுருவல்:-**

ஏறத்தாழ கி.பி. 1310 சுந்தரபாண்டியன் வீரபாண்டியன் என்னும் சகோதரர்கள் அரசுரிமைபற்றி அடிக்கடி நடந்த யுத்தத்தில் ஒருமுறை வீரபாண்டியன் தோல்வியுற்றான். அதன்பின் அப்போதைய வட இந்தியாவின் பேரரசான முகமதி மன்னனான அலாவுதீன் கில்ஜியின் படைத்தளபதியான மாலிக்காபூரை தென்னாட்டில் படையெடுத்து வந்து தனக்கு உதவுமாறு நேசக்கரம் நீட்டினான். இதை வாய்ப்பாகப் பயன்படுத்திய அவன் மதுரையைக் கொள்ளை அடித்து டில்லி திரும்பினான். இதன்பின் வீரபாண்டியன் ஆட்சியில் இருந்த போதே முகன்மது பின்துக்ளக்கினால் அனுப்பப்பட்ட அசன்ஷா என்பவன் மதுரையைக் கைப்பற்றினான். இவன் டில்லித் தொடர்பை அறுத்துவிட்டு மதுரையைத்தானே அரசாளத் தொடங்கினான். இங்ஙனம் முகமதியர் ஆட்சி கி.பி. 1330 முதல் 1363 வரை (33 வருடங்கள்) மதுரையில் நடந்ததாக அறிகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கே சிற்றரசர்களாக விளங்கிய பாண்டிய மன்னர்கள் விஜய நகர வேந்தனாகிய "குமாரகம்பண்ணன்" படையுடன் வந்து முகமதியரை வெல்ல உதவவேண்டும் என வேண்டினான். விஜய நகர பிரதிநிதிகள் முகமதியரை வென்று அங்கேயே தங்கி விட்டனர். பின்னர் இதுவே தமிழகம் முழுவதும் பரவி கிருஸ்ணதேவராயர் காலத்தில் வலுப்பெற்றது. இது 1363இல் இடம் பெற்றது.

**தெலுங்கர் ஆட்சியும் அருந்தமிழ் நலிவும்:-**

விஜயநகரப்பேரரசு தெலுங்கர்கள் என அறிவோம். தெலுங்கர் ஆரியக்கலப்பு இனம் என்பதால், பல்லவ காலத்தில் நுழைந்த வட மொழிக்கே ஆதரவு வழங்கி திருக்கோவில்களில் எல்லாம் அதை நிலை நாட்டினர். தெலுங்கு நாட்டிலிருந்து ஆயிரமாயிரம் பிராமணர்களைக் கொண்டுவந்து குடியமர்த்தினர். எனவே களப்பிரர்காலத்தில் நுழைந்த வேற்று மொழிபல்லவர்க காலத்தில் பரவி விஜயநகரப் பேரரசின் காலங்களில் முழு ஆலயங்களிலும் தமிழ் ஒழிக்கப்பட்டது. உதாரணமாக:- பழனி திருக்கோவில் நிகழ்வொன்றில் கலந்து கொண்ட விஜயநகர மன்னனின் பிரதிநிதியான ராமபையன் என்பவன் அங்குதமிழ் வழிபாட்டை நீக்கி விட்டு ஆரியப்பூசகர் களை அங்கு நிறுவியதை ஓர் செப்புப்பட்டையம் தெளிவாக விளக்குகின்றது. கி.பி. 7ஆம் நூற்றாண்டில் நாயன்மாரால் பாடல் பெற்ற தலங்களில் தமிழ் ஒழிக்கப்பட்டு குகையிடிகலகம் என்கின்ற நிகழ்வின் ஊடாக ஆரியப்பிராமணர்கள் ஆலயங்களில் தேவாரக் கல்வெட்டுக்களை இடித்து அழித்தனர். இது புதைந்த கல்வெட்டு ஒன்றில் குறிக்கப்பட்டுள்ளது. ஆயினும் மன்னர்களும் மக்களும் தமிழ் வழிபாட்டை மறந்தபோதும் இறை அருளால் நம்பியாண்டார் நம்பிகள் சோழ மன்னனுடன் இணைந்து சிதம்பரத்தில் மறைத்து வைக்கப்பட்ட திருமுறைகளை கண்டெடுத்தனர். அங்கு கிடைத்த பதிகங்கள்

| கிடைத்த பதிகங்கள் | பாடிய பதிகங்கள் |
|---|---|
| 384 | சம்பந்தர் - 16000 |
| 307 | அப்பர் - 49000 |
| 100 | சுந்தரர் - 38000 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனையவை கறையான் புற்றிற்கு இரையாகக் கண்ட மன்னன் மனம் வெதும்பினான். அந்நேரத்தில் இறைவனே அனைவருக்கும் கேட்கத்தக்கதாக இக்காலத்திற்கு உரியவை இருக்க மற்றையதை நாமே மறைத்தோம் எனக் கூறினான். பின் காலத்தில் தோன்றிய சேக்கிழார் பெருமான் சமண காவியத்தில் திழைத்த மன்னனை தொண்டர் பெருமை உணரும்படி செய்வித்தார். கண்ட பெருமந்திரமே மூவர் பாடல் என்றார் உமாபதிசிவம். இவரே சைவசித்தாந்த நூல்களைத் தந்தவர்களில் தலை சிறந்தவர். இவர் ஒரு பிராமணர் என்பது குறிப்பிடத்தக்கது. ஆயினும் மூவர் பாடலே பெருமந்திரம் என இறைஅருளால் மொழிந்தார். சேக்கிழாரும் தொண்டர் பெருமை கூறும் பெரிய புராணம் படைக்க முனைய இறைவனே "உலகெலாம்" எனும் அடியினை எடுத்துக் கொடுத்து உள்ளிருந்து உந்துவித்தான். எனவே தமிழர் வாழ்வியல் சமய நெறிக்கு சாதியம் என்பதற்கு இடம் ஏதும் இல்லை. அனைவரும் இறைவனை அடையலாம் அவரைப் பூசிக்கலாம் என உணர்த்தும் ஆதாரப்பதிப்பே பெரியபுராணம். இறைவனை அடைய இவர்கள் அனைவரும் வாழ்ந்து காட்டிய உதாரணங்கள் வரலாறுகள் இவர்களின் தனிச்சிறப்பை உணர்த்தி நிற்கும்.

அவையாவன:-

1) நாயன்மார்களில் எல்லாச்சாதியினரும் இருக்கின்றனர். ஆதலால் உயர் சாதியில் பிறந்தால் தான் இறைவனை அடையலாம் எனும் மாயப் போர்வையை பெரியபுராணம் கிழித்தெறிந்தது.

2) மாயாவிகள் விட்ட கதைபோல பாவம் செய்தவர்கள் தான் தாழ்ந்த சாதியில் பிறப்பார், அவர்கள் இறைவனை அடையமுடியாது எனும் கூற்று நந்தனார், அதிபத்தர் போன்ற பேரருளாளர்களால் பொய்ப்பித்தது.

3) தொழிலால் இறைவனை அடையும் வழி தடைப்படுமா என்றால் இல்லை. பெரியபுராண நாயன்மார்களில் அரசர், ஆண்டி, மீன் பிடிப்பவர் என அனைத்துத் தொழிலாளர்களும் உளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4) நிறைய சாத்திரங்கள் மந்திரங்கள் கற்றவர் தான் இறைவனை அடையலாம் என்பதும் பொய்க்கும் படியாக மறை ஓதி இறைவனை அடைந்தாரும் உளர், ஓதாது உணர்ந்த பெரியார்களும் உளர்.

5) இறைவனை அடைய கடுமையான தவம் மிகக்கடினமான செயல்களைச் செய்ய வேண்டும் என்பது பொய்யானதாகும். ஏனெனில் பிள்ளைக்கறி சமைத்தாரும், பூமாலை தொடுத்தாரும் இறைவனை அடைந்தனர்.

6) இறைவனை அடைய செய்யும் எல்லாம் விட்டு விட்டு முயல வேண்டுமா என்பதையும் பெரியபுராணம் தூக்கி எறிந்தது. செய்யும் தொழிலை விடாமல் செய்து கொண்டே அதில் ஒரு கொள்கையை வைத்துக்கொண்டால் அதனூடாகவும் இறைவனை அடையலாம்.

7) இறைபணி எல்லாம் சமம். பூப்போட்டவனிற்கு முத்தி தாமதமாகவும் குடமுழுக்கு செய்தவர்க்கு உடனே முக்தி என்பதும் பொய்க்குமளவு மந்திரம் ஏதுமின்றி உள்ளன்புடன் கல்லால் எறிந்தவர்க்கும் முக்தி அளிப்பான் என்பதையும் மெய்ப்பித்தது.

8) இறை பூசை என்பது சிறு செயலா? அதற்கு நிறை ஆகமம் படிக்க வேண்டும் என்று கூறுபவர் யாராக இருந்தாலும் அவரைப்பார்த்து சிரிக்கும் பெரிய புராணம் ஆகமம் ஏதும் அறியா கண்ணப்பருக்கு முக்தி அளித்தான் இறைவன் பூசை எதுவாயினும் உள்ளன்பின் வலுவே அதை நிர்ணயிக்கின்றது.

9) இறைபணிகளில் ஏதாவது ஒன்றைத் தேர்வு செய். வானமே இடிந்தாலும் பூமியே பிளந்தாலம் கொண்ட இலட்சியம் மாறாது இருத்தலே பக்தியின் வீரம் என்று பறைசாற்றியது பெரியபுராணம்.

10) தமிழ்நாட்டில் இருந்தால் தான், நாயன்மார்கள் அறுபத்து மூவர்மட்டும் தான் என்பதையும் தகர்த்து அப்பாலும் அடிசார்ந்த அடியார்க்கும் அடியார் என்பதால் "உலகெலாம்" எனத்தொடங்கும் பெரியபுராணம் சாதி, சமயம், நாடு, மொழி, காலம் எல்லாம் கடந்து பரந்த அன்பைப் பறை சாற்றியது எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11) துறவறத்தால் மட்டும்தான் இறைவனை அடையலாம் என்னும் கருத்தை மாற்றியது பெரிய புராணம். ஏனெனில் பெரும்பாலானான நாயன்மார்கள் இல்லறத்தில் மனைவி யின் ஒத்துழைப்புடனேதான் முக்தி அடைந்தார்கள். இதுவே சிறந்த தமிழர் மரபு வழியாகும்.

12) பெண்களால் இறைவனை அடையமுடியாது அவர்கள் ஆணாகப்பிறந்த பின்பு தான் இறைவனை அடையலாம் என்பதைப் பொய்யாக்கி, இறைவனே அம்மையே எம் அருகில் வருக என விழித்தவர் காரைக்காலம்மையார். ஆதலால் அவை அனைவரும் அடையலாம் என்பது தமிழ்நெறி.

இங்கே திருத்தொண்டர் புராணத்தின் சிறப்பை விளக்கிய பாம்பன் சுவாமிகள், ஆரியர் அல்லாதார் வடமொழி வேதங்களைப் படிக்க அதிகாரம் இல்லையாம் அதிகாரம் இல்லாவிடில் பரவாயில்லை திருத்தொண்டத் தொகையும் அதன்வழி பெரியபுராணமும் இனிதிருக்க எல்லாக் குலத்தோரும் சமமாக அங்கே வீற்றிருக்க அதை அதிகாரத்தோடு ஓதுங்கள் போதும் என்றார். ஒவ்வொரு மனிதனும் முழுமைபெற தாய்மொழி வழிபாடு அவசியம். இறைவனே சொற்றமிழால் எனைப்பாடு எனப் பணித்த காரணத்தினால் **17.09.2012** "சுவிஸ் சைவநெறிக்கூடம் அருள்ஞானமிகு ஞானாம்பிகை உடனாய ஞானலிங்கப்பெருமான்" திருமுன்னிலையில் சென்றது போக இனிக் கருவறையில் தமிழே ஒலிக்க வேண்டும் எனும் உலகப்பிரகடனம் உயர்திரு செந்தமிழ் வேள்விச் சதுரர் மு.பே. சத்தியவேல் முருகனார் தலைமையில் அறிஞர்கள் கூடிய சபையில் ஒருமித்த குரலால் தீர்மானிக்கப் பட்டது. காலம் காலமாக இருந்த நடைமுறையை மாற்றலாமா? எனும் பலரது கேள்விகட்கும் இக் கைந்நூல் விடை பகரும். இது ஒன்றும் புதுமை அல்ல. ஏற்கெனவே இருந்ததை மீள் எழுச்சி கொள்ளச் செய்தான் இறைவன் என்பதுவே உண்மை. உலகமே காணாத அற்புதங்கள் இன்றும் செந்தமிழ் வழிபாட்டால் ஞானலிங்கேச்சரத்தில் நிகழ்கின்றன. என்பது பல அடியவர்களின் சாட்சியாகும். இறைவன் தமக்கென சுவிஸ் தலைநகரில் ஆலயம் அமைக்க வழிகோலி உள்ளான். இவ்வாலயத்திருப்பணி வேலையில் தம்மடியவர் ஒருவர் சொப்பனத்தில் தோன்றி உனது ஏழு தலைமுறைக்கும் முக்தி தருவோம் இவ்வாலய ராஜகோபுர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பணியைப் பொறுப்பெடு எனக்கோர அவ்வடியவரும் மனமுவந்து எழுபத்தையாயிரம் சுவிஸ் பிராங்குகளை ராஜகோபுரத் திருப்பணிக்கு வழங்கியுள்ளார்.

ஞானலிங்கேஸ்வர குருக்கள் "சிவருசி" தொண்டரடிப் பொடிகள் ஆலயத்திற்கான "திருத்தொண்டர்சபை" நிறுவ எம்பெருமானிடம் அனுமதி கேட்டிருந்தார். அவ்வேளையில் அடியவர்கள் சிலரின் சொப்பனத்தில் எம்பெருமானே தோன்றி கப்பல் ஒன்று புறப்பட ஆயத்தமாக உள்ளது அங்கே விரைந்து சென்று பயணச் சீட்டினைப் பெற்றுக்கொள்ளுங்கள் எனப் பணித்துள்ளான்.

அத்தோடு வருடாந்த அலங்கார உற்சவத்தின் பிரகாரம் தமது மணவாளக்கோலத்தின் காணொலியில் தமது இடது திருக்கண்ணைத் திறந்தும், என எண்ணில்லாத அற்புதங்களினால் செந்தமிழ் ஆகம வழிபாட்டிற்குச் சான்று பகர்கின்றான்.

இந்நூலின் உண்மைத் தகவல்கள் அனைத்தும் மு.பே. சத்திய வேல் முருகனாரின் தகவல் பொக்கிசத்திலிருந்து எடுத்து அப்படியே ஒப்படைத்துள்ளோம். வாழ்க அவர் தமிழ்ப்பணி.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## எம்மைக் கருவாக்கி,
## காத்து வளர்த்த அன்னை விடைபெற்ற வேளை...

அம்மா நீங்கள் துளித்துளியாக எங்களிடம் விடைபெற்ற வேளை
எங்கள் உதடுகள் அம்மாவின் நாமத்தை உச்சரிக்க
உடலோடு உள்ளமும் குமுறிப் பாதங்கள் தடம்பிரள
எங்கள் அண்ணனும் எமையாளும் சிவனை அழைக்க
நீங்கள் பெற்றெடுத்த மங்கையரும் பாத கரம் வருடிவிட - நீங்களோ
கண்ணீர்த்துளிகளால் மட்டுமே போகிறேன் மக்களே என்றவாறே
எம்மிடம் விடைபெற்று ஈசனின் திருவடியைப் பற்றினீர்கள்
மறப்போமா இந்நாளை? பெறுவோமா இப்பேற்றை?
என்னே விதிவெல்லமுடியவில்லை அம்மா - எங்களாலும்
இல்லையம்மா வந்துவிடுங்கள் என்று சொல்லவும் - முடியவில்லை
நாட்களுமோடி மாதமும்கழிந்துவிட்டது - தாயே
இன்னமுமே அமைதிகொள்ளமுடியவில்லை - அம்மா
நாங்களும் நீங்களும் அமைதிபெற பூசிக்கிறோம் உங்களையே
ஆனாலும் கண்விழிக்கும் நேரமெலாம் நெஞ்சம் வெடித்தழுகிறோம் - அம்மா
சத்தமின்றி மனதுக்குள் சத்தியங்கள் செய்திட்ட போதிலும்
உங்கள் அன்புத்திருவுருவம் அரம் கொண்டு தாக்குதம்மா
கடவுளை நேரில் கண்டதில்லை அம்மா - ஆனாலும்
உங்களையே கடவுளாகக் கொண்டே வாழ்ந்தோம் அன்னையே
இணையில்லாத் தெய்வம் நீங்கள் - கேட்டது கொடுத்திடும்
அந்த உமையவளும் நீங்களம்மா
எங்கள் உயிரே எங்கள் உதிரத்தின் உறவே
பூசிப்போம் உமை என்றும் புன்னகைப்போம் உம்மில் இறைகண்டு.

உள்ளம் உருகி: பிள்ளைகள்

Harikanan (Pvt.) Ltd., Jaffna, Sri Lanka.
Tel : + 94 21 222 2717

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org